தென்மொழி

பகை வென்றிட விலையெனில் முழு இனம் விழுமே!

கோரிடக் கோரிடக்
கொஞ்சமும் இரங்கிலாக் கொடியர்
நேரிடைப் பேச்சென
நீண்ட இடைவெளி செய்தார்!
ஆரிடர்ப் படுபவர்?
ஐயகோ, தமிழீழ மக்கள்!
போரிட்டு வெல்கவே
பொங்கி யெழுந்து, நம் புலிகள்!

சிற்சில பூசலில்
சிக்கிநாம் இணைந்திடாச் சிறுமை
கற்சுதை போலப்
பொடிந்துநம் கதையினை முடிக்கும்!
பற்சிதை வுற்றிட—
முகவாய் பொடிந்திடப்—புலிகள்
முற்பகை வென்றிட
விலையெனில் முழுஇனம் விழுமே!

சுவடி : 23
ஓலை : 4
ஆசிரியர் பெருஞ்சித்திரனார்
விலை உருபா 1-75

நமக்கு வந்த மடல்கள்.

O: *1206:* மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். நமது இதழ்களிலும் மூப்பனார், பழனியாண்டி போன்ற சாதிப் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதுவது ஏற்புடையதன்று. இனியாகிலும் தவிர்க்கப் பெற வேண்டுமென விரும்புகிறோம். வணக்கம்.

—மா. ஆறுமுகம், தலைவர் திருக்குறள் மன்றம், பல்லடம்.

O: *1207:* பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா, தங்களின் மலேசியச் சுற்றுலா வழி, நான் என் வாழ்நாள் காலம் முழுவதும் கற்றாலும் பெற முடியாத அறிவு ஊக்கத்தைத் தங்களின் அறிவுரைகளை நான்கு நிகழ்ச்சிகளில் பெற்றேன். தாங்கள் ஆற்றும் தமிழ்த் தொண்டுக்கு இந்த வீரகுமரனின் தோள்கள் என்றும் துணை நிற்கும் என்று உறுதி கூறுகிறேன். நான் பள்ளி சென்று ஆங்கிலமும் மலாய் மொழியும் கற்றேன். எனக்கு முன்னே என்னுள் இருந்த தமிழும், பாவலர் சா. சி. சுப்பையனார் அவர்களோடு கொண்டிருந்த உறவும், என் தாய்மொழி வளர்ச்சிக்குத் துணையாய் அமைந்தது. தாங்கள் சா. சி. சுப்பையனார் அவர்கள் இல்லத்தில் நடந்த விருந்து நிகழ்ச்சிக்கு வரப்போகும் செய்தி அறிந்து, என் நெஞ்சில் நெடுநாளாக விடை கிடைக்காத வினவுக்கு என்று விடிவு கிடைக்கும் என நம்பி அந் நிகழ்ச்சிக்கு வந்தேன். தமிழனுக்கு விடுதலை எப்போது என் பதுதான் என் வினா. நான் கேளாமலேயே தாங்கள் அன்று விடை தந்தீர்கள். 'சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத் தாழா துஞற்று பவர்க்கு' எனும் குறள் விளக்கம் எனக்கும் என் தோழர்களுக்கும் நிறைவு தந்தது. தங்களைப் போன்ற ஆன்ற அறிவு கொண்ட அறிஞர்கள் என் தமிழ் நலத்துக்கு மிகவும் தேவை. அதனால் தாங்கள் நோய் இல்லாமல் பல்லாண்டுக் காலம் வாழ வேண்டும் என்று என் நெஞ்சம் விரும்புகிறது. தாங்கள் முதல் முறை மலேயா வந்த போது நான் வாழும் பத்து காசா நகரத்தில் தங்களின் சொற்பொழிவுக்கு ஆவன செய்தவர்களில் நானும் ஒருவன். ஐயா ஈப்போவில் கடந்த ஈராண்டாக இயங்கி வரும் இலக்கிய வகுப்பில் நான் ஒரு மாணவன். அங்குப் பயிலும் என் தோழர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் தென்மொழியை அறிமுகம் செய்தேன். அனைவரும் விரும்பிப் படிக்கிறார்கள். வாசகர்கள் மிகவும் ஆவலுடன் தென்மொழியின் வரவை எதிர்பார்த்துள்ளனர். தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் தமிழர்களிடம் சென்று சேர்க்கும் பணியே சரியான பணி என நம்புகிறேன். என் இனம் மெல்ல மெல்ல அழிந்து வருவதை நான் அறிகிறேன். தந்தை பெரியாரைப் போல் அவருக்குப் பின் யாரும் தமிழனுக்குத் துணையாக வாழ வில்லை. உங்கள் கருத்துகளைக் கேட்டபின் என்னுள் ஒரு நம்பிக்கை ஒளி பிறந்துள்ளது. இருப்பினும் ஒரு கை பார்த்திடலாம். அவன் இழிவினில் ஒரு துளி தீர்த்திடலாம், என்பதற்காக நான் உங்கள் தொண்டுக்கு என் உயிர் உள்ளவரை துணை நிற்பேன், என்று கூறி இத்துடன் முடிக்கிறேன். நன்றி.

—வீரகுமரன், மலேசியா,

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை,-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்:மா.பூங்குன்றன்.க.மு;அமைச்சர்: கல்லை-அருட்செல்வன்
புரப்பாளர்கள்: தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு ஆர். பிரான்சிசு, தென்மொழி கா.இளமுருகன், தென்மொழி த. தானியேல் செபராசு, தென்மொழி அரசத் தொகையன், பாவலர். சா. சி. சுப்பையா, பாவலர். அ. பு. திருமாலனார், தென்மொழி த. அரிமா வளங்கோ; பொன். பாலகிருட்டிணன்; தென்மொழி இரா. பாலகங்காதரன் (தொலைபேசி : 847829)

சுவடி 23] உ०கஅ மீனம் (மார்-ஏப்-'87) [ஓலை 4

தமிழுணர்வு இல்லாதவர்கள் தமிழினத்திற்கு உதவ முடியாது!



அண்மையில் நம் அலுவலகத்திற்கு, தமிழீழத்திலிருந்து இளைஞர் ஒருவர் வந்தார். அவர் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று வினவினோம். அவர், தாம் எந்த விடுதலை இயக்கத்தையும் சேர்ந்திருக்கவில்லையென்றும், புதிதாகத் தாம் ஓர் அமைப்பை உருவாக்கப் போவதாகவும் கூறி, அது பற்றித் தாம் கூறப் போவ

தைச் சிறிது நேரம் காது கொடுத்துக் கேட்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். 'அதற்குப் போதிய நேரம் இப்பொழு தில்லையே' என்றுதெரிவித்தோம். 'அவ்வாறுனல், இந்த அறிக்கையைப் படித்துப் பாருங்கள். பின்னர் ஒரு நாள் வந்து ஓய் வாக நான் பேசிக் கொள்கிறேன்' என்று கூறிப் பன்னிரண்டு பக்க அளவில் உருட்டச்சு செய்த அறிக்கை ஒன்றினைக் கொடுத் தார். மேலோட்டமாக ஒருமுறை பிரித்துப் பார்த்தோம்.

அதில், வர்க்கப் போராட்டம் பற்றிப் பொதுவுடைமைக் கருத்துகள் அடங்கிய வகையில் இளைஞர்களை அறை கூவி அழைக் கும் ஓர் அறிவிப்பு இருந்தது. அதை ஓய்வாகப் படிப்பதாகவும், பின்னர் அவரை மடலிட்டு அழைத்துப் பேசுவதாகவும் கூறி, அவருடைய முகவரியை அவ்வறிக்கையின் இறுதியில் எழுதும்படி கேட்டுக் கொண்டோம். அவரும் அதை வாங்கி, S. Raveendran என்று ஆங்கிலத்தில் எழுதிப், பின்னர் ஏதோ நினைத்து, அதை அடித்துவிட்டு, S. ரவீந்திரன் C/o...... என்று ஒருவர் பெயரை யும் அவர் தங்கியிருந்த முகவரியையும் எழுதிக் கொடுத்தார். அதை வாங்கிப் பார்த்துவிட்டு, 'என்ன தம்பி' நீங்கள் தமிழரா அல்லது வேறு இனத்தவரா?' என்று கேட்டுவிட்டு, 'ஒரு வேளை நீங்கள் சிங்களவராய் இருங்கலாமோ' என்று ஐயுறுகின்றேன். ஏனெனில் தமிழராகிய நீங்கள் ஆங்கிலத்திலன்றோ முதலில் உங் கள் பெயரை எழுத முனைந்திருக்கின்றீர்கள். பின்னர் அதை அழித்துவிட்டு ஆங்கிலத்தில் உங்கள் தந்தையார் பெயரின் முன் னெழுத்தை எழுதி, பின்னர் உங்கள் பெயரைத் தமிழ் எழுத்து களில் 'ரவீந்திரன்' என்று எழுதியிருக்கின்றீர்கள். ரவீந்திரன் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அதற்கு என்ன பொருள் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்' என்றேன். பிறகு 'ஒரு தெலுங்கர் தம் பெயரைத் தெலுங்குக்காரரிடம் தெலுங்கில் தான் எழுதிக் காட்டுவார். ஒரு மலையாளி தம் பெயரை மலை யாளி ஒருவரிடம் மலையாளத்தில்தான் எழுதிக் காட்டுவதைப் பெருமையாகக் கருதுவார். ஒரு வங்காளியும், ஒரு குசராத்தியும் ஒரு பஞ்சாபியரும் கூட அவரவர் மொழியில்தான் எழுதுவார். ஆனல் தமிழர் என்று கூறிக் கொள்ளும் நாம்தாம் நம் பெயர் களைக் கூட ஆங்கிலத்தில் எழுதிக் காட்டுவதைப் பெருமையாகக் கருதுகின்றோம்.

'நமக்குத் தமிழுணர்வு இல்லாத வரை, நாம் தமிழ் மொழிக்கோ தமிழினத்திற்கோ, தமிழ்நாட்டிற்கோ நலமான எந்த ஒரு செயலையும் செய்து விடமுடியாது. அவ்வாறு செய்து விட முடியும் என்பவரையும் நாம் நம்பிவிட முடியாது. தாய் மொழி உணர்வையே மதிக்காத, கடைப்பிடிக்காத நாம் நம் இனத்தின் மேல் எப்படி அன்போ அக்கறையோ செலுத்த முடி யும்? எனவே, தமிழினத்திற்கோ, தமிழ் மொழிக்கோ, தமிழ் நாட்டிற்கோ ஏதாவது செய்து விட வேண்டும் என்று துடிப்பவர்கள், முனைபவர்கள் முதலில் தங்கள் தாய் மொழியான தமிழின் மேல் அன்பு செலுத்த வேண்டும். அதில் உண்மையாகப் பேச

ஆர்வம் கொள்ள வேண்டும். நீங்கள் தமிழ் மொழியைப் பேச வில்லை; தமிழ்மொழியில் எழுதவில்லை. ஏதோ ஒரு மொழியின் சொல்லைத் தமிழ் எழுத்தில் எழுதுகிறீர்கள். அல்லது தமிழ் மொழியை வேறொரு மொழியின் எழுத்துகளில் எழுதுகிறீர்கள். உங்கள் தந்தையார் பெயரின் முன்னெழுத்தை 'சி' என்று எழுதா மல் 'S' என்று ஆங்கிலத்தில் எழுதுகிறீர்கள்' நீங்களும் பொருள் தெரியாமல் வேறொரு மொழியில் பெயர் வைத்துக் கொண்டிருக் கின்றீர்கள்.'

'இவ்வாறு தமிழுணர்வு கொள்ளாத நீங்கள் தமிழினத்திற்கு அல்லது தமிழ்நாட்டிற்குத்தான் என்ன நலன் செய்துவிட முடியும் என்று கருதுகிறீர்கள்? மேலும் உங்கள் அமைப்பு அறிக்கையில் 'வர்க்கம்' என்று ஒரு சொல்லைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இங்கே 'வர்க்கம்' எங்கே இருக்கிறது? பல்வேறு மதங்களும் சாதிகளுந் தாம் இருக்கின்றன. அவை நீங்கள் கூறும் வர்க்கத்தினின்று வேறுபட்ட- அழுத்தமாக மக்கள் மனத்தில் ஆழமாக வேரூன்றிய பிரிவுகள் ஆயிற்றே! காட்சியளவாகக்- கருத்தளவாக- உள்ள இப் பிரிவுகளை இங்கு ஒழித்துக் கட்டாமல், வேறு எங்கோ உள்ள ஒரு நாட்டில் கற்பனைப் பிரிவாக உள்ள 'வர்க்க'ப் பிரிவை இங்கே ஒழிக்கப் புறப்பட்டுவிட்டு, இங்குள்ள இந்த மக்கள் பிரிவாகிய தமிழினத்துக்கு நலஞ் செய்ய முற்பட்டிருப்பதாகக் கூறுகிறீர் களே! இந்த முயற்சியில் நீங்கள் வெற்றியடைய முடியுமா? அல் லது உங்களை நம்புகிறவர்களுக்குத்தான் வெற்றியைத் தேடிக் கொடுக்க முடியுமா?'

'மேலும், தமிழினத்துக்கு நலம் செய்வதாகப் புறப்பட்டிருக் கும் நீங்கள், தமிழராகவன்றோ இருக்க வேண்டும். நீங்கள் தமிழரென்று எந்த வகையில் உங்களை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் பெயரிலும் தமிழில்லை; பேச்சி லும் தமிழில்லை; உங்கள் எழுத்தில் தமிழ் வரிவடிவம் மட்டுந்தான் உள்ளது; மொழி வடிவம் இல்லை. வெறும் வரிவடிவம் மட்டும், அஃதாவது எழுத்து மட்டும் - மொழியாகி விடுமா? எனவே மொழியுணர்வற்ற- மொழிப் பற்றற்ற - மொழிமேல் அன்பும் அக்கறையுமற்ற நீங்கள் எப்படியிந்தத் தமிழினத்துக்குப் பாடு பட்டு, நலந்தேடிக் கொடுக்க முடியும்? நீங்கள் நலந்தேடிக் கொடுப்பதாகக் கூறுவதைத்தான் நாங்கள் எப்படி நம்பிவிட முடி யும்?'— என்று அவர் அமைவாகக் கேட்டுக் கொண்டிருக்குமாறு, மிகவும் அன்பாகவும் விளக்கமாகவும் விரிவாகவும் கூறினோம்.

நம் காலத்தில் உள்ள இளைஞர்களில் பலபேர் மொழியைப் பற்றியோ, இனத்தைப் பற்றியோ, நாட்டிலுள்ள வறுமை, அறி யாமை பற்றியோ, கவலைப்படாமல் இருப்பதுடன் தாறுமாறான பல இழிந்த வழிகளிலும் சென்று தங்களைப் பாழடித்துக் கொள் கின்ற நிலையையே நாம் பார்க்கிறோம். திரைப்படம், மது, சூதாட் டம், பந்தயம், ஒழுக்கக் கேடுகள், பயனற்ற பொழுது போக்குகள்,

முதலியவற்றில் ஈடுபட்டுச் சீர்குலைந்து போகும் நிலை அனைவரும் அறிந்தனவே! அவ்வாறல்லாமல் ஒரு வகையில் நம் மக்கள்மேல் அன்பும் அவர்களின் முன்னேற்றத்தில் ஆர்வமும் கொள்கின்ற இளைஞர்கள் சிலர் இவ்வாறு நம் மக்களியலுக்குப் பொருத்த மில்லாமல், கஞ்சி குடிக்கவும் வக்கற்றுக் கிடக்கும் இவர்களுக்குக் கறியும் சோறும் போடுகிறோம் என்று கற்பனை உலாவந்து -காட்சிக்குக் காட்சியாய் விளங்கும் நடைமுறைத் தாழ்ச்சிகளை விட்டு விட்டு, எங்கோ, எப்பொழுதோ, எதனாலோ இவர்களின் துன்பங் களை மீட்டு விடுவதாக வாய்மாலம் பேசிக் காலமெலாம் வரட்டு மெய்மங்களையே முரட்டுத்தனமாகப் பேசிப்பேசி முட்டுண்டு போகின்றனர்.

இப்படிப் பட்டவர்களுக்கு இங்குள்ள பார்ப்பனீயக் கொடுமைகளும் தெரிவதில்லை. முதலாளியக் கொள்ளைகளை எதிர்க்கவும் துணிவிருப்பதில்லை. இவர்கள் வெறும் கொள்கைக் கோழையர்களாகவே வாழ்ந்து - வளத்தையும் நலத்தையும் இழந்து, வெறும் செயல்வறியர்களாகவே இயங்கி - இறுதியில் எங்கேனும் ஒரு நல்வாய்ப்புக் கிடைத்தால் - தாங்கள் முன் கொண்ட - படித்த - கொடிதூக்கிய கொள்கை அனைத்துக்கும் முழுக்குப் போட்டு விட்டு, ஓரளவு குட்டி முதலாளிகளாகவே வாழ்ந்து வருவதை நாம் கடந்த நாற்பதாண்டுக் காலங்களில்- பலரிடமும்- பல சூழல்களிலும் பார்த்திருக்கின்றோம்; பார்த்துக் கொண்டுமிருக்கின்றோம்.

இக் காலத்தில் இளைஞர்கள் நல்ல உணர்வுள்ளவர்களாகவும் அறிவுள்ளவர்களாகவும் வளர்ந்து வருவது நமக்கு ஒரு வகையில் மகிழ்ச்சியே. ஆனாலும் அவர்களின் உணர்வும் அறிவும் எவ்வகையில் கொண்டுசெலுத்தப் பெறுகின்றன என்பதை அறிய நமக்கு வருத்தமே மேலிடுகின்றது. அவர்களின் உணர்வில் உறுதியில்லை; ஊக்கமில்லை; அறிவிலும் தெளிவில்லை; முழுமையுமில்லை. இத் தகைய வெற்றுணர்வையும் விளக்கமில்லாத அறிவையும் வைத்துக் கொண்டு அவர்கள் என்ன செய்துவிட முடியும் என்று கருது கிறார்களோ, தெரியவில்லை.

அவர்களின் உணர்வும் ஊக்கமும் ஓரீராண்டுக்குள்ளாகவே ஒரு சிலரைச் சந்தித்துப் பேசிய அளவிலேயே, உள்ளடங்கிப் போகின்றன; தங்கள் கருத்துகளைச் செயல் வடிவில் கொண்டு வருவதற்கேற்ற பொருள் ஏந்துகளும், கருவி வசதிகளும், ஆட்கள் வலிவும், இவர்களிடம் இல்லாமல் இருப்பதால், அவற்றைத் தேடுகின்ற முயற்சியில் விரைவில் மிகவும் மனம் சோர்ந்து போகின்றனர்; மனஞ்சலித்து விடுகின்றனர். தமக்கு முன்னோரெல்லாம் இவர்கள் இருக்கின்ற நிலையில் இருந்துதான் ஊக்கமாகவும் விடாப்பிடியாகவும் பல்வகையான முயற்சிகளுக்குப் பின்னர், அவர்கள் கொள்கைகளை வளர்த்தெடுத்தனர் என்பதை இவர்கள் ஊன்றிப் பார்க்க வேண்டும். வெறும் முரட்டுத்தனமான முயற்சியும், முழுமையற்ற ஈடுபாடும் இவர்களை முழுப் பயன் உடையவர்களாக உருவாக்குவதில்லை.

பாடுகொள நல்லிளைஞர் பாய்வீர் இன்றே!

மொழியின்றி இனமில்லை; இனமின்றி நாடில்லை;
முந்நிலையும் அழிப்பதற்கே முனைந்தார் இன்றே!
விழியின்றி வழியுண்டோ? வித்தின்றி விளைவுண்டோ?
விழுதின்றி ஆலமரம் நிற்றல் உண்டோ?
வழியின்றித் தமிழ்மக்கள் தவிக்கின்றார்; நாட்குநாள்
வாழ்தற்கும் இயலாமல் வணங்கிச் சாவார்!
பழியின்றிக் காப்பதற்குப் பகலின்றி இரவின்றிப்
பாடுகொள நல்லிளைஞர் பாய்வீர் இன்றே!

ஊர்க்கு ஊர் செல்லுங்கள்! உழவர்களை உழைப்பவரை
ஒருங்கிணைத்துக் கூறுங்கள்! உணர்வேற் றுங்கள்!
நேர்க்குநேர் நில்லுங்கள்! நிகழ்வதனைக் கூறுங்கள்!
நெடியவர லாறுகளை நினைவூட் டுங்கள்!
ஆர்க்குஆர் தடையென்னும் அரசியலை விளக்குங்கள்!
அழிந்துவரும் தமிழினத்தின் அழியா நிற்கும்
வேர்க்குவேர் நீரூற்றி எருவிட்டு விளையுங்கள்!
வீணர்களை விலக்குங்கள்! விடிவு தோன்றும்!

தமிழ்நிலத்தை விடுவித்துத் தமிழினத்தைக் கட்டுவித்துத்
தமிழ்மொழியைத் தூய்மையுடன் தழைக்கச் செய்வோம்!
அமிழ்கின்ற வரலாற்றைப் புதுப்பிப்போம்! அறிவியலை
வாழ்வியலுக் கொத்தபடி ஆக்கு விப்போம்!
கமழ்கின்ற பண்பாடு மிளிர்கின்ற கலைகளுடன்
கருத்தழிவும் இழிவுணர்வும் இல்லா வாறாய்க்
குமிழ்நின்ற ஒளிகூட்டும் இனநலத்தைக் கட்டுவிப்போம்!
குமுகாய நலஞ்சேர்ப்போம்! கூடு வீரே!

(முன் பக்கத் தொடர்ச்சி)

இவர்களின் குறிக்கோள்கள் உயர்ந்தனவாக இருக்கலாம். ஆனால் அவற்றைக் கொண்டு செலுத்துவதற்கும் வெற்றியுடன் செயல்படுத்துவதற்கும் ஏற்ற வகையில் இவர்கள் தங்களைத் தகுதியாக்கிக் கொண்டார்களா, வளர்த்தெடுத்துக் கொண்டார் களா எனில், இல்லையென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. வெறும் உணர்வும் ஊக்கமும் இவர்களிடம் நீண்ட காலம் நீடித் திருப்பதில்லை. மிகக் குறுகிய காலத்திலேயே, இவர்கள் பிறரி டம் எதிர்பார்க்கும் ஒத்துழைப்புக் கிடைக்காத பொழுது மனம் சாம்பிப் போகின்றனர். பொதுத் தொண்டுக்கான சரியான நடைமுறைகளையும் இவர்கள் வெகுவாகக் கடைப்பிடிப்பதில்லை. இந்நிலையில் காலந்தான் இவர்களுக்குக் கை கொடுக்க வேண்டும்; அல்லது கண் திறக்கச் செய்ய வேண்டும். ⁽)

செய்திகள்

1. சந்திரன்- நேசமணி வாழ்க!

கடந்த தி. பி. 2017, மடங்கல் (14-9-86) ஞாயிறு, காலை 10 மணியளவில், தஞ்சாவூர் அருளானந்தபுரத்தில், திருவாளர்கள் அ. கனகராசு, அ. வியனரசு அவர்களின் தங்கை செல்வி நேசமணிக்கும், செல்வன் சந்திரன் அவர்களுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்த்திருமணம் நடத்தி வைத்தார்கள். திருமணத்திற்கு திரு. ஆர். இராமகிருட்டிணன் தலைமை தாங்கினார். திருவார். அ. கனகராசு வரவேற்புரையாற்றினார். திருவாளர்கள் வி. இராமு, மருத்துவர் செல்வம், தென்னவன்கோ, புலவர் வேலவன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினார்கள். இறுதியில் திரு. அ. வியனரசு நன்றியுரை செய்ய மணவிழா இனிது நிறைவுற்றது.

2. கல்வி சமய ஆய்வு அரங்கம், சென்னை:

சென்ற 11-10-86 காரிக்கிழமை, சென்னை, அண்ணாசாலை, தேவநேயப்பாவாணர் மாவட்ட நடுவண் நூலகத்தில், பர். மு. தெய்வநாயகம் க. மு. அவர்கள் தலைமையில், காலை 10 மணியளவில் 'தமிழ்வழிக் கல்வி பயின்றவர்களுக்கே தமிழ்நாட்டில் வேலை' என்னும் கருத்தை வலியுறுத்தி, கல்வி ஆய்வு அரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கில், பர். மா. நன்னன் (தி. க.), பேரா. கிள்ளிவளவன் (த. நா. கா.) எம். கே. ஈ. மவ்லானா (மு. லீக்), கோ. கலிவரதன் (சனதா), டி. தங்கபாலு பா. .உ (இ. கா), பர். வலம்புரிசான் பா. உ. (அ. தி. மு. க.), பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உ. த. மு. க.)' ஆகியோர் கருத்துரையாற்றினர்.

அன்று பிற்பகல் 3 மணியளவில் 'தமிழர் கோவில்களில் தமிழே வழிபாட்டு மொழி' என்னும் கருத்தை வலியுறுத்தி, சமய ஆய்வு அரங்கம் அதே தலைமையில் நடைபெற்றது. அதில் பர். க. ப. அறவாணன், 'ஐரோப்பிய நாடுகளில் தாய்மொழி வழிபாட்டு வெற்றி வரலாறு' என்னும் தலைப்பிலும், பர். தெ. ஞானசுந்தரம் 'வைணவத்தில் தமிழ் வழிபாட்டு வரலாறு' என்னும் தலைப்பிலும் பாவலரேறு பெருஞ்சித்திரனார், 'தமிழ் நாட்டில் தமிழ்வழிபாட்டு வரலாறு' என்னும் தலைப்பிலும், பர். மு. தெய்வநாயகம் தொகுப்புரையாகவும் உரையாற்றினர்கள். இரவு 8-30 மணியளவில் கருத்தரங்கம் முடிவுற்றது.

3. கதிர்ச்செல்வன் எழிலி வாழ்க!

சென்ற 9-2-87 திங்கள் காலை 9 மணியளவில், திருச்சி, பட்டர்லர்த்சாலை, அன்னதான சமாச திருமண மண்டபத்தில், செல்வன் வே. கதிர்ச்செல்வன் என்னும் இரவிகுமாருக்கும், செல்வி

து. எழிலி என்னும் நளினிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனு அவர்கள் தலைமையில் தமிழர் திருமணம் நடைபெற்றது. திரு வாளர்கள் பேரா. ஐ. அரங்கராசன் க. மு., அ. அருணுசலம் (உதவி ஆளுமைப் பொறியாளர்), பேரா. மு. சி. கேசவன் க. மு, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

4. சென்னை, கிறித்துவக் கல்லூரி முப்பெரும் விழா!

நடந்த 10-2-87 செவ்வாய் மாலை 4 மணியளவில் சென்னை, கிறித்துவக் கல்லூரியில், நூற்றாண்டு விழா நடைபெற்றது. பர். மித்ரா. சி. அகத்தின் (கல்லூரி முதல்வர்) தலைமையிலும், பேரா. வே. கிருட்டிணசாமி அவர்கள் முன்னிலையிலும் தொடங்கிய இவ்விழாவிற்கு, மாணவர் தலைவர் எசு. சௌந்திரராசன் வரவேற்புரையாற்றினர். திருவாட்டியர். பியூலா அகத்தின், மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் குத்துவிளக்கேற்றினர். திருவாளர்கள், திருக்குறள் வீ, முனுசாமி, பர். சூ. இன்னாசி, எல்ல. இராசமாணிக்கம் ச. ம. உ. ஆகியோர் சிறப்புரையாற்றினர். இலங்கை ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் விழாத் தொடக்கவுரையாற்றினர். திருவாளர்கள் பேரா.மோசசு மைக்கேல் பாரடே, து. குருசுநேசக்குமார் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

மறுநாள் 11-2-87 அறிவன் மாலை 5 மணியளவில் கல்லூரி முப்பெரும் விழாவைக் கொண்டாடியது. திரு. எசு. சௌந்திரராசன் (மாணவர் தலைவர்) வரவேற்புரையாற்றினர். பர். ஆர். இராசகுமார் தலைமை தாங்கினர். துறைத்தலைவர் பேரா. வே. கிருட்டிணசாமி தொடக்கவுரையாற்றினர். பின்னர், பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள் 'இயற்றமிழ்' பற்றியும், பேரா பர். பொ. ஆ. சத்தியசாட்சி அவர்கள் 'இசைத்தமிழ்' பற்றியும், திருவாட்டி புனிதவதி இளங்கோவன் (சென்னை வானொலி நிலையம்) நாடகத்தமிழ் பற்றியும் சிறப்புரையாற்றினர். திரு. சு. சுரேசுகுமார் நன்றியுரையாற்றிட அந்த நாள் விழா நிறைவுற்றது.

அடுத்த நாள் 12-2.87 அன்று கல்லூரியின் பரிசளிப்பு விழா நடைபெற்றது. விழாவிற்குத் தமிழ்த்துறைத்தலைவர் பர். மித்ரா. சி. அகத்தின் தலைமையும், பேரா. வே. கிருட்டிணசாமி முன்னிலையும் ஏற்றார்கள். விழாவில் கலைஞர் கருணாநிதி அவர்களும் கி. வீரமணி அவர்களும் சிறப்புரையாற்றினர்கள். இறுதியில் து. குருசுநேசக்குமார் நன்றியுரையுடன் முப்பெரும் விழா இனிது நிறைவுற்றது.

5. சென்னை அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம் தமிழ்ப்பண்பாட்டு மையம் சிறப்புரை!

சென்ற 15-2-87, காலை 10 மணியளவில், சென்னை, அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், கிருட்டிணா நகர், வேலம்மாள் நிறை

நிலைப் பள்ளியில், 'தமிழ் எங்கே? தமிழன் எங்கே?' என்னும் தலைப்பில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சிக்கு வழக்குரைஞரும், பண்பாட்டு மையத் தலைவரும் ஆகிய திரு. நா. நல்லப்பன் க. இ., ச. இ. அவர்கள் தலைமை தாங்கினார்.

6. முத்தமிழ்மன்றத் தொடக்க விழா, புதுவண்ணை:

கடந்த கும்பம் 4-ஆம் பக்கல் (16-2-87) அன்று மாலை 6-30 மணியளவில் சென்னை, புதுவண்ணை, எம். டி. எல். பி. (கப்பல் தொழிலாளர்) நிறுவனக் குடியிருப்பில் திருவள்ளுவர் திருநாள் விழாவும், முத்தமிழ் மன்றத் தொடக்க விழாவும் சிறப்புற நடை பெற்றன. விழாவிற்கு திரு. தென்முகநம்பி தலைமையேற்றார். முத்தமிழ்மன்றத் தலைவர் திரு. ப. சிவபெருமான் முன்னிலை தாங்கினார். பொருளாளர் திரு. ஏ. தெய்வமணி வரவேற்புரை யாற்றினார், திருவாளர்கள் முகிலன், உலக முதல்வன்ஆகியோர் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். அவர்களையடுத்து திருவாளர் கள் அமரேசன், இறையருளன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி ப. முருகவேள் ஆகியோர் கருத்துரையாற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரை யாற்றினர். திரு. த. அரசன் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இரவு 11 மணியளவில் நிறைவுற்றது.

நிகழ்ச்சியில், திருவாளர்கள். 1. இராதாகிருட்டிணன், 2. சு. ரமேசு, 3. மு. இராமு, 4 சு. மூர்த்தி, 5 சொ. குணு, 6. இ. இராசா, 7. அ. பழனி, 8. து. ரவி, 9. ஏ. செல்வமணி, 10. இரா. இராசா, 11. லோகநாதன், 12. அமரேசன், 13. சங் கர், 14. செயகரன் ஆகியோர்க்கு அவர்களின் வேண்டுகோளின் படி முறையே 1. திருமாலன், 2. அரசிறைவன், 3. தமிழினியன் 4. ஆண்டகை, 5. பண்பரசன், 6. தமிழரசன், 7. தமிழ்க்குமரன் 8. செங்கதிர், 9. திருச்செல்வன், 10. செந்தமிழரசு, 11. உலக முதல்வன். 12. புனல்வேந்தன், 13. தமிழ்க்கதிர், 14. தமிழ் வென்றி,— என்னும் தூயதமிழ்ப் பெயர்களைப் பாவலரேறு அவர் கள் சூட்டி மகிழ்ந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சி திரு. தமிழரசன் அவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்றது.

இவ்வாண்டு உ. த. மு. க. நடத்தவிருக்கும்
வரலாற்றுச் சிறப்புடைய போராட்டம்!

தமிழின உரிமை மீட்புக் கோரிக்கைப் போராட்டப் பெருநடை!

கன்னியாகுமரியிலிருந்து தில்லிவரை 100 நாள்கள் நடந்தே சென்று நடுவண் ஆட்சியினரிடம் கோரிக்கை கொடுத்தல்!

விரைவில் பிற விளக்கங்கள்!

மக்களைக் கொன்ற ஏரி! (NIOS)

சித்திரச் செந்தாழை ஆறிறைவன்.

கடந்த ஆண்டு (1986) ஆகசுடு- 21-ஆம் நாள்! மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் கேமரூன் (Cameroon) என்ற நகரத்திற்கு வடமேற்குக் கரையோரமாய் அமைந்துள்ளது 'நியாசு' (Nios) என்ற ஓர் ஏரி! அந்தக் குறிப்பிடத் தகுந்த நாளுக்கு முன்பெல்லாம் இந்த ஏரி அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒரு சிறந்த நகர் அடையாளமாகவும், மிகவும் கண்கவர்ந்த அழகிய நீலவண்ண நிறத்துடன், அனைவரையும் வரவேற்கும் ஏரியாகவும் அமைந்திருந்தது என்று வருங்காலம் நம்புவது கடினம்! இப்போது அந்த ஏரியின் பெயர் 'ஏரியைக் குறிப்பிட முடியாத' எந்த வகையான வாழ்க்கை அடையாளக் குறியாகவும் அந்த ஊர் மக்களுக்கு இல்லாமல் போய்விட்டது; அங்கு வாழ்ந்த மக்களின் இழப்பாகிவிட்டது!

ஆம்! உலகில் எத்தனையோ வகையான அழிவுகள் இருந்த போதிலும் இந்த அழிவு புதுமையான ஒன்றாகவே இப்போது கருதப் படுகிறது. கடந்த 2,3 ஆண்டுகளில் நடந்த போபால் நச்சு-வளி வெளிப்பாடு, கொச்சிக்கு அருகில் குளோரின் வளிக்கசிவு, கான்பூர் கந்தகப் புளிய (அமில) வெளிப்பாடு, பம்பாய் அம்-மோனிய வளி வெளிப்பாடு, தில்லி ஒலியம் வளிக்கசிவு, திருச்சி கரியமில வளிக்கசிவு (Carbon Monoxide) போன்ற பல வகையான நச்சுவளிக் கசிவுகளினால் ஏற்பட்ட அழிவுகள் வருந்தத் தக்கனவாக இருந்தாலும், அந்த அழிவுகளுக்கு ஒரு வகையில் நாமே காரணமாகிறோம். கவனக் குறைவினால் ஏற்பட்டவையே அவை! இவை மட்டுமின்றி, கடந்த ஆண்டு அமெரிக்கா அனுப்பிய சேலஞ்சர் (Challenger) ஏவுகணை எரிந்து போனதற்கும் பொறித் தொடர்பான ஒன்றில் ஏற்பட்ட சிறுபிழைதான் காரணம்! அதில் பயணம் செய்த ஐந்து பேர்களில் இருவர் பெண்டிர்! அப்போதே புதிதாக வழியனுப்பிவிட்டு, விண்ணை நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்த அதே கணப்பொழுதில் ஏவுகணை எரிந்துபோன நிலையைக் காணும் தீய வாய்ப்பைப் பெற்றிருந்த வழியனுப்பிய மக்களின் முன்பிருந்த மகிழ்ச்சிக் கண்ணீர் உடனே துயரக் கண்ணீராய் மாறுவதற்கெல்லாம் (தொலைக்காட்சி செய்தி இது!) காரணம் எதிர்பாராத பிழைதான்!

அதேபோல் சென்ற ஆண்டே உருசியாவில் உள்ள செர்னோபில் (Chernobyl) என்ற இடத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் அணுஉலை வெடித்து, அதனின்று வெளிப்பட்ட 'அணுச்சிதைவினால் நச்சணுக்கள் காற்றில் பரவி அந்நாடு முழுவதுமாக விளைச்சல், மற்றும் உணவுத் தொடர்பான அனைத்தும் அழிக்கப்பட்டு ஒழுங்கு செய்யப்பட வேண்டியிருந்தது. இதுவும் அணு உலையில் உள்ள சேர்பொருள் ஒன்றின் பற்றாக்குறையினால் ஏற்பட்டிருக்கிறது. இதே ஆண்டில் சுவிட்சர்லாந்தில் உள்ள பாசல் (Basel) என்ற நகரில் உள்ள வேதியியல் மருந்துக் கிடங்கு ஒன்றில் ஏதோ ஒரு கவனக் குறைவினால் தீப்பற்றி எரிந்ததால், உருகிய நிலையில்

மருந்துகளும், மருந்துகள் எரிந்ததனால் உண்டான நச்சுப் புகையும் அக் கிடங்கிற்கு மிக அருகில் ஓடும் ரெயின் (Rhein) என்ற ஆற்றில் கலந்து, ஆறு தூய்மை நிலையை இழந்து, பழுப்பு நிறமாக மாறியது. இதனால் பிரான்சு, செருமனி போன்ற நாடுகளுக்குக் கப்பல் போக்குவரத்து, குடிநீர்த் தொடர்பான பல வகையான பயன்களுக்கும் அந் நகருக்குத் தடையானது மட்டுமல்லாமல், அந்த ஆறு பிரான்சு வழியே செருமனிக்கும் செல்வதால் அண்டை நாடுகளுக்கும் ஊறு விளைவித்ததாகிவிட்டது. இங்ஙனம் வெளி நாடுகளிலும் ஆங்காங்கே சிறு கவனக் குறைவினால் பெரும் தீய விளைவுகளும் நடைபெற்றிருக்கின்றன.

இவையன்றி, மக்களின் "கவனக் குறைவு" ஏதுமின்றி இயற்கையில் திடீரென ஏற்படுகின்ற நிலநடுக்கம், எரிமலை போன்ற நிகழ்வுகள் எப்போதாவது ஒரு சமயம் நடக்கிறது. எனினும் இவை மக்கள் முன்னமே அறிந்த ஒன்று. ஆனால் செல்வ வளமற்ற மக்கள் வாழும் மேற்கு ஆப்பிரிக்கப் பகுதியில் உள்ள இந்த நியாசு ஏரியில் வெளிப்பட்ட நச்சுவளிப்புகை, அந்தப் பகுதியில் இருந்த ஏராளமான (1,746) மக்களைக் கொன்றுவிட்டது மட்டுமன்றி தன் தன்மையையும் இழந்து விட்டது.

ஆகசுடு 21-ஆம் நாள் முன்னிரவு, ஏரிக்கு அருகேயுள்ள சிற்றூர்ப்புற மக்கள் அனைவரும் உணவு முடித்துவிட்டு இரவு (9-11) படுக்கைக்குச் சென்று அமைதியாகத் துயில் கொண்டிருந்தனர். ஊரே உறங்கிக் கொண்டிருந்த அந்த அமைதியான இரவில்தான் வெகு தொலைவில் தோன்றும் இடியொலியைப் போன்ற ஒரு பெரிய ஒலியைக் கொண்ட முழக்கம் அம் மக்களில் ஒரு சிலர்க்கு உறக்கத்தில் அரையும் குறையுமாய்க் கேட்டிருக்கலாம். அம் முழக்கம்தான், அங்கு நடக்கப்போகும் ஒரு பெரும் இடர்க்கு எச்சரிக்கை செய்தது போலும்!

ஆம், அந்த அழகுமிக்க ஏரியின் கரையோர விளிம்புப் பகுதியின் ஆழத்திலிருந்து வண்ணமற்ற வளிப்புகை வெளிப்பட்டுச் சுழன்று சென்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் கரையோர விளிம்பினின்று கரைப்பகுதியின் வழியே அடர்த்தியான அந்தக் கரிவளிக் காற்று (Carbon -di- oxide) மிகுதியாக அடங்கியுள்ள அந்த நச்சுவளிப்புகை (Volcanic gas) * அங்கு மிக அருகிலுள்ள பள்ளத்தாக்குப் பகுதியில் பரவிச் சென்றது. அந்தப் பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள சிற்றூரில்தான் ஏதுமறியா, களங்கமற்ற அம் மக்கள் உணவு உண்டு உறக்கத்தில் அமைதி கொண்டிருந்தனர். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அந்தச் சிற்றூர்ப்புற மக்களை அந்த நச்சுப் புகைக் புகைக் கூட்டம் சூழ்ந்து கொண்டு அவர்களை உறக்கத்திலும் மூச்சுத் திணற வைத்தது. எல்லோருமே இருமத் தொடங்கினர். ஒரு சிலர் குருதி வாந்தி

* Valcanic gas —> Mostly of carbon di oxide + some carbon monoxide + some Hydrogen Sulphide.

எடுத்தனர். அதற்குப் பின்பு அவ்விடத்திலிருந்து மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு ஓடிக்கொண்டிருக்கும்போதே விழுந்து இறந்திருக்கின்றனர். உயிரிழப்பிலிருந்துத்தப்பித்த ஒரு சிலர், அந்தத் தொலைவில் கேட்ட ஒலியை நினைவு கூர்ந்து சொல்கின்றனர். முதலில் ஒரு புதுமையான மணம் அவர்களுடைய குடிசைக்குள் ஊடுருவிப் பரவியிருக்கிறது. அது குண்டுத்தூள் எரிந்தது போன்றதாகவும், அழுகிய முட்டை நாற்றம் போன்றதாகவும் இருந்திருக்கிறது. வீட்டுப் பொருட்கள் தடம்புரண்டிருக்கின்றன. சில பொருள்கள் காற்றில் பற்றி எரிந்திருக்கின்றன. ஏதோ ஒரு வளி திறந்த வெளிப்புறத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறது என்பது அம் மக்களால் கொஞ்சம் உணர முடிந்திருக்கிறது. காரணமின்றி அச்சமடைந்த அம் மக்களும் உடனடியாகக் கொல்லப்படவில்லை. அவர்கள் அங்கிருக்கின்ற பழமையான ஒழுங்கு செய்யப்படாத தெருக்களிலும், சந்துகளிலும் கூட்டம் கூட்டமாக ஓடியிருக்கின்றனர். தப்பிய ஒரு சிலர் நினைவிழந்த நிலையிலிருந்து மீண்டபோது, இரவு தொடங்கியிருப்பதை உணர்ந்திருக்கின்றனர். அவர்கள் தமக்கு நேரே இறந்து கிடந்தவர்களின் உதடுகள் வெள்ளைப் புண்ணாகவும். அதிலிருந்து வறண்ட உமிழ்நீர் வெளிப்பட்டும், அந்த உடல்களைத் தொட்டுப் பார்க்கையில் கல்போன்றிருந்ததாகவும் கூறுகின்றனர்.

காமரூனின் தலைநகரமான யாவண்டே (Yaounde) வின் வடமேற்கிலிருந்து 200 கல் தொலைவிலுள்ள ஒரு சிறிய ஊர் சு—பம் (Su—bum). அந்த ஊரில் உள்ள ஒருவர், இங்கு மக்கள் இறந்து கொண்டிருப்பதை நேரில் சற்றே தொலைவிலிருந்து பார்த்திருக்கிறார். இன்னொரு சிற்றூர் ஆள், மக்கள் வீட்டிலும், சாலைகளிலும், வெளிப்பகுதிகளிலும், நீரோடைகளிலும் இறந்து கிடப்பதைப் பார்த்திருக்கிறார். இருப்பினும் இது ஒரு செய்தியாகப் போய்ச் சேரவில்லை. இ'து இரவு நேரமாக இருந்தது முதல் காரணமாகும், ஏன், அச் சிற்றூர்க்கு 10 கல் தொலைவே உள்ள 'வம்' (Wum) என்ற நகருக்கு இந் நிகழ்விற்கு மறுநாள் பகல் வரையிலும் இந்தத் துன்பச் செய்திகள் செல்லவில்லை. அரசுப்பணியாளர் ஒருவர் பகலுக்குப்பின்பு 'வம்' நகரிலிருந்து நியாசுக்கு வண்டியில் நெருங்கிக் கொண்டிருக்கும் போதுதான், ஏராளமான மக்களின் இறந்த உடல்களையும் கால்நடைகளின் உடல்களையும் கண்டிருக்கிறார். அதன் பிறகுதான் அந்தக் கொடூரச் செய்தி காமரூன் தலைநகரமாகிய 'யாவன்டே' ஐ அடைந்திருக்கிறது.

இந்தக் கொடிய செய்தியைக் கூட யாவன்டே தலைநகர அலுவலகத்தினர் கடுமையாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவர்களால் இப்படிப்பட்ட புதிய இடரை முதலில் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லைதான்! இதன் தொடர்பான செய்திகளின் கடுமையான சான்றுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்தபின்புதான் இசுரேல் முதலமைச்சர், கருப்பர்கள் வாழும் பகுதிக்குச் சென்று பார்வையிட்டிருக்கிறார். அதன்பிறகு-

தான் வளித்தொடர்பாக வந்த பேரிடரைப் பற்றிய செய்திக உலகம் முழுவதும் பரவத் தொடங்கின.

இசுரேல், தேவையான மருத்துவர்களையும், படைக்குழு ஒன்றினையும் அனுப்பியது. அமெரிக்கா, அந்தக் குறிப்பிட்ட வளியைப் பற்றி ஆய்வதற்கு அறிஞர் குழு ஒன்றையும், இதே போன்று நிகழ்ச்சி மேலும் நடக்க இயலுமா என்று ஆய்வ தற்கு மற்றோர் அறிஞர் குழுவையும் அனுப்பியது. இதே போன்று கனடா, இங்கிலாந்து, மேற்கு செருமனி, இசுபெயின் ஆகிய நாடுகள், தங்களின் விருப்பப்படி இழப்பீட்டுத் தொகை களையும், பண்டுவத்துக்குரிய மருந்துப் பொருட்களையும் அனுப்பி யிருக்கின்றன.

இப் பேரிடரினால் இறந்த மக்களின் உறவினர் சிலருக்குச் சில உடல்கள் ஒப்படைக்கப்பட்டன போக மற்ற எல்லா உடல் களையும் நாட்டுப் படைக் குழுவினர் உடனுக்குடன் அடக்கம் செய்தனர். கால்நடைகளாகிய ஆடு, மாடு, பன்றிகளுக்கு எந்த உறவும் இல்லாததால், அவற்றின் அடக்கம் கடைசியில் நடந்தது.

அப் பகுதியில் உள்ள குறைந்த எண்ணிக்கையுள்ள மருத்துவ மனைகளில் நிறையப் பேர் தீக் காயங்களுடன், பண்டுவம் பார்த்துக் கொண்டனர். எனினும் இங்ஙனம் பண்டுவம் பெற்று உயிர் தப்பிய மக்கள் சிலர் மீண்டும் 'நியாசு' சிற்றூரில் வாழ விரும் பினர். நச்சுவளி சூழ்ந்து பின்பு அது மேலே போய்விட்டபின்பு அங்கு அமைதி நிலவினாலும், அங்கு வாழ்வது கடினம் என்று அர சினர் கூறியும், சிலர் தம் சொந்தச் சிற்றூரை விட்டுச் செல்ல முத லில் மறுத்தனர். தம் மூதாதையர் நிலபுலங்களுக்குச் சொந்த மான பகுதியிலிருந்து மாற்றம் செய்ய விரும்பிலர். இவ்வாறு உயிர்தப்பிய மக்கள் ஒரு புறம் இருக்க, கால்நடைகளாகிய ஆடு, மாடு, பன்றி போன்றவை எல்லாமே அடியோடு அழிந்து விட்ட போதிலும், மெலிந்த நிலையில் ஒரு கோழி 5 கற்களுக்கு அப்பால் புதிதாகத் தோண்டி அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நடமாடிக் கொண்டிருந்தது. இந்த ஒன்று மட்டும் தப்பியது இரக்கமாகவும் வியப்பாகவும் இருந்ததாம்.

மேற்படி நடந்த ஒரு பேரிடரினால் இவ் வுலகமக்கள் வேறொரு புதிய இடரையும் இப்போது தெரிந்து கொண்டு விட்டனர். காமரூன் நகரிலுள்ள அந்த நியாசு ஏரி இப்போது பார்ப்பதற்குப் பழுப்பு நிறமாய்க் காட்சியளிக்கிறது. அப் பகுதியில் உள்ள தெருக் கள் பாலைவனமாக உள்ளன; மக்களின் வாழ்வொலியோ, கால் நடைகளின் உரிமைக்குரல் ஒலியோ கேட்காது, ஓர் ஆழ்ந்த அமைதி கொண்ட பகுதியாய் இருக்கிறது. காமரூன் நகரில் உள்ள அலுவலகம் ஓர் ஒழுங்கான முறையில் இல்லாது இருந்து, பின்பு கடுமையான தாக்கமாகிய இவ்வியற்கை நிகழ்விற்குப் பின்பு ஒரு திருப்புமுனையாக விரைவான முறையில் 'தேசிய பேரிடர்க் குழு' என்ற பெயரில் ஒரு குழு இயங்கி வருகிறது! 0

சங்கராச்சாரியாருக்கு ஒரு நேரடி மடல்!

(ஆசிரியர் குறிப்பு: இது, கடவுள் பத்திமை கொண்ட, சங்கராச்சாரியார் அவர்களை மதிக்கின்ற அறிஞர் ஒருவர், அப் பெரியவர்க்குத் தமிழ் வழிபாட்டினை வலியுறுத்தி எழுதிய மடலின் படியாகும். இதில் உள்ள அயற்சொற்கள் மாற்றப் பெறாமல் அப்படியே தரப்பெறுகின்றன. மடல் எழுதியவரின் உணர்வும், துணிவும் மதித்துப் பாராட்டத் தக்கன.)

6-5-1986

Dr. இராமச்சந்திரன்
5 மகாலிங்க செட்டித் தெரு, மகாலிங்கபுரம்,
சென்னை-600 034

தவத்திரு சந்திரசேகர சங்கர ஆச்சாரியார்கள் சமூகத்திற்கு மிகப் பணிவன்புடன் எழுதிக் கொண்டது.

கடந்த கால தமிழ் மொழி, தமிழ்நாட்டு வரலாறுகளைப் படித்தும், கேட்டும் உண்மையான நிலையை அறிந்த பின்பு எழுதும் இக் கடிதத்தில் கண்டுள்ள என் வேண்டுகோளுக்கு தாங்கள் செவி சாய்ப்பீர்கள் என நம்புகிறேன்.

தனி இனமாக, கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டு தமக்கு என கடவுள்களையும் அவர்களுக்கென்று (தமிழிலே வழி பாட்டு முறையையும் தமிழர்கள் வைத்து இருந்தது தாங்கள் அறியாத ஒன்று அல்ல. வெகு பழைமையான தமிழ் மொழியினர் தங்கள் கடவுளுக்கு வேற்று மொழியில் எப்படி பூசை செய்து இருக்க முடியும்? நான் இத்துடன் இணைந்திருக்கும் நிழற்பட பிரதியில் அறிஞர் பெருஞ்சித்திரனாரின் தொலைக்காட்சி பேச்சின் முழுப்பகுதி இதனை நன்கு விளக்கும். எழுத்தில் இணைத்தது கடுகளவுதான். ஆக உண்மை நிலை இவ்வாறு இருக்க வடமொழிதான் தேவ மொழி அப்படி, இப்படி என்று பொய்யுரைத்து தமிழ்நாட்டு ஆலயங்களில் பார்ப்பனர்கள் வடமொழியை தங்களது சுயநலத்துக்காக புகுத்தியது குற்றம் என்றால் அதைத் தாங்கள் தொடர்ந்து ஆதரிப்பது மிகவும் வருந்தற்குரியது. கடவுள் பெயரைச் சொல்வதால் மட்டுமே செய்யும் தவறுகள் சரியாகி விடாது. இனியாவது தமிழ்நாட்டு ஆலயங்களில் கடவுள் வழிபாடு தமிழிலேயே இருக்க வேண்டும் என்று தாங்கள் கூறினால் அது தங்களுடைய நிலைக்குப் பொருத்தமாக இருக்கும்.

பொதுவாகவே, இங்கே உள்ள தமிழ் இலக்கியங்களை விட்டு விட்டு சுந்தரகாண்டம் பாராயணம் செய்ய வேண்டும், கீதை படிக்க வேண்டும் என்று கூறுவது தமிழ் இலக்கியங்களை நலிவு அடையச் செய்யும் முயற்சியாகவே தோன்றுகிறது. கந்தர் அநுபூதி படித்தால் மன நிம்மதி கிடைக்காதா? சஷ்டி கவசம்

படித்தால் நன்மைகள் வராதா? அல்லது திருப்புகழைப் படித்தால் திருவருள் கிடைக்காதா? வழிபாடு வடமொழியில், படிக்கும் தத்துவ மத நூல்களும் வடமொழியில் என்று எதற்கும் வடமொழியை விரும்புவது தமிழ் மொழியையும், தமிழ் பண்பாட்டையும் ஒழித்து விடும் முயற்சியாகத்தான் இருக்க முடியும். இந்நிலையில் தாங்கள் ஒரு அரசியல் வாதியை விட எப்படி வேறுபட்டவராக இருக்க முடியும்? இது மிகவும் வருத்தம் தருகிறது.

'முத்தமிழால் வைதாரையும் வாழ்த்தும் முருகன் பெயரைக் கூட 'சுப்பிரமணியன்' போன்று வடமொழி பெயர்களாக மாற்றி வடமொழியில் அர்ச்சனை செய்வது சகித்துக் கொள்ள முடியாத ஒன்றாகும். தங்களுடைய கூற்றுப்படியே வடமொழி பெயர்களை தமிழில் மொழி பெயர்த்தால் அதன் மகிமை குன்றிவிடும் எனும் பட்சத்தில் தமிழ் கடவுளின் பெயர் முருகனை வடமொழியில் மொழி பெயர்த்து எழுதுவது எந்த விதத்தில் தர்மமாகும்? நியாயமாகும்? ஆக குறைந்த பட்சம் தமிழ்க் கடவுள் முருகனின் ஆலயங்களில் எல்லாம் தமிழில் மட்டுமே வழிபாடு நடத்த வேண்டும் என்று தாங்கள் ஆணையிட்டால் அதுவே தாங்கள் தினமும் வழிபடும் காஞ்சி காமாட்சி அம்மன் மேல் தாங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை காட்டுவதாகும்.

தமிழர்கள் தமிழ்நாட்டில் தமிழில்தான் வழிபாடு நடத்தி வந்தார்கள் என்று உறுதியுடன் தமிழ்க் கடவுளாம் முருகன் மீது ஆணையாகக் கூறுகிறேன்.

தமிழ்நாட்டின் ஆலயங்களில் தமிழில் வழிபாடு என்றுமே நடந்ததில்லை என்று தாங்கள் காமாட்சி அம்மன் மேல் சத்தியம் செய்வீர்களேயானால் நான் இப்பிரச்சினையை இத்துடன் விட்டு விடுகிறேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் வழிபாடு!

ஒப்பம் ச. இராமச்சந்திரன்.

"தென்மொழி"

சென்னை-5

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா 20.00
அரையாண்டுக் கட்டணம்	:	,, 10.00
தனியிதழ்	:	,, 1.75

ஓரிதழுக்கு உருபா 3.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

பெருஞ்சித்திரனார் நேருரைகள்!

(27-12-84-இல், புலவர் பா. கிருட்டிணமூர்த்தி க. மு., அவர்கள் தம் இலக். மு. பட்டத்திற்குப் பாவாணர் அவர்களின் 'திருக்குறள் தமிழ் மரபுரை' ஆய்வுக்காகக் கண்ட நேருரை!)

வினா: 1 பாவாணர் ஐயாவைத் தாங்கள் முதன் முதல் எங்கு எவ்வாண்டில் சந்தித்தீர்கள்?

நான் சேலம் உயர்நிலைப்பள்ளியில் 4-ஆம் படிவம் படித்துக் கொண்டிருந்த பொழுது, 1947-ஆம் ஆண்டில், அப்பொழுது சேலம் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த பாவாணரைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவர் வீட்டில் சந்தித்துத் தொடர்பு கொண்டேன். அது முதல் அவருடன் தொடர்ந்த நட்பை ஏற்படுத்திக் கொண்டேன். அதன்பின் நான் 1949-50-இல் சேலம் கல்லூரியில் சேர்ந்து படித்த பொழுது அவரிடம் நேரிடையாகவே படிக்க நேர்ந்தது.

2. தங்களுக்குப் பாவாணர் ஆசிரியரா? தாங்கள் ஐயாவிடம் எங்கு எப்போது பயின்றீர்கள்?

ஆம். அவர் 1950-52 ஆண்டுகளில் இடைநிலைக் கல்வியில் (Intermediate) தமிழ் இலக்கண வகுப்பு ஆசிரியராக இருந்தார்.

3. பாவாணர் ஐயா உடன் பணியாற்றும் ஆசிரியர்களிடமும், தம்மிடம் பயிலும் மாணவர்களிடமும் பழகும் தன்மை யாது?

பாவாணர் அப்பொழுதிருந்தே, தமிழ்மொழி ஆராய்ச்சியிலும் சொல்லாராய்ச்சிலும் ஆழமாக ஈடுபட்டிருந்ததால், பிற ஆசிரியர்களிடம் அதிகமாக நெருங்கிப் பழக மாட்டார். தம் ஆராய்ச்சிக்குத் துணை நின்ற இரண்டு மூன்று ஆசிரியர்களிடம் மட்டும் ஓரளவு பழகுவார். மாணவர்களிடமும் அப்படித்தான் ஓரளவு பழகுவார். தமிழ் வளர்ச்சிக்குத் துணையாக நிற்கும் மாணவர்களிடமே அவர் அன்பு காட்டுவார்.

4. பாவாணரின் கற்பிக்கும் ஆற்றல் பற்றிக் கூறுங்கள்.

பாவாணர் கல்லூரிக்கு வந்த பின்னால், கற்பிப்பதைக் குறைத்துக் கொண்டார். நான் படிக்கும் பொழுது, கிழமைக்கு 3 அல்லது 5 வகுப்புகள்தாம், அதுவும் இலக்கண வகுப்புகளுக்குத் தாம் வோவார். அவ் வகுப்புகளிலும் பெரும்பாலும் மாணவர்கள் ஐயம் கேட்டால் தவிர சொல்லித் தருவது குறைவு. ஆனால் சென்னை, திருச்சி, மன்னார்குடி முதலிய ஊர்களில், உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியராக அவர் பணியாற்றுகையில், ஓரளவு நன்கு பயிற்றுவிப்பார் என்று கேள்விப்பட்டுள்ளேன்.

5. பாவாணர் கற்பித்த வகுப்பில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றினைக் குறிப்பிட இயலுமா?

கல்லூரிகளில் கற்பிப்பது குறைவு. எனவே அவ்வாறான நிகழ்ச்சி ஏதும் நினைவில் இல்லை.

6. தாங்கள் தென்மொழி இதழ்ப்பணியை எவ்வாண்டுத் தொடங்கினீர்கள்?

1954-ஆம் ஆண்டு பிற்பகுதியில்.

7. தென்மொழி இதழிலேயே பாவாணர் எழுத்துகள் இடம் பெற்றனவா?

ஆம். அவரை அதில் கண்ணிய ஆசிரியர் என்று குறித்திருந்தேன். எனவே அவர் கட்டுரை ஒவ்வோர் இதழிலும் வரும்.

8. பாவாணர், தங்கள் ஆசிரியர் என்பதால் அவர் எழுத்துப் பணியைத் தென்மொழி இதழில் இடம்பெறச் செய்தீரா? அன்றி வேறு கரணியங்கள் உண்டா?

பாவாணரின் தமிழ்க் கொள்கை தனிச் சிறப்பு வாய்ந்தது; தமிழ்மொழி வரலாற்றிலேயே,

1. தமிழ் தனித்து இயங்க வல்லது.
2. அது, உலக முதல் தாய் மொழி.
3. அது, திரவிடத்திற்குத்தாயும், ஆரியத்திற்கு மூலமுமானது.
4. அறிவியல், மொழியியல் அடிப்படையில் அது முறையாக வளர்ந்து வளர்ந்து வளம் பெற்றது.

—என்னும் நான்கு கொள்கைகளையும் ஓரளவு மெய்ப்பித்துக் காட்டினவர் பாவாணர் ஒருவரே. எனவே, என்னுடைய தமிழாசிரியர்கள் பலரினும் அவரை மிகவும் மதித்தேன்; போற்றினேன்; அவர்க்குத் துணை நிற்க விரும்பினேன்; அவர் கொள்கைகளை வாணாள் முழுவதும் முயன்று, உலகில் பரப்ப எண்ணினேன்; அதன் பொருட்டாகவே தென்மொழியைத் தொடங்கினேன். அவ்விதழ்ப் பெயரும் அவரால் இடப்பெற்றதுதான். எனவே, அதில் அவர் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதினார். அவற்றிற்கு மாத அன்பளிப்புகளையும் தந்து கொண்டிருந்தேன்.

9. தென்மொழி பாவாணர்க்கு அளித்த சிறப்புப் பட்டங்கள் தாங்களே அளித்தனவா? அன்றி மற்றவர்களும் சேர்ந்து அளித்தனரா?

ஆம். முழுவதும் நானே பல்வேறு கட்டுரைகள் வாயிலாக அளித்தவை.

10. தென்மொழி வழி பாவாணர்க்குத் தாங்கள் ஆற்றிய தலையாய நன்றி யாது?

அதை அவரே பல விடங்களில் வலியுறுத்தியுள்ளார். தென்மொழிதான் அவரையும் அவரின் தமிழாராய்ச்சி ஆற்றலையும் வெளி உலகுக்குத் தெரியும்படி வெளிப்படுத்தியது. இதை விடத் தலையாய நன்றி வேறு என்ன உள்ளது? மற்றும் அவர்க்குப் பல முறை பொருட்கொடைகளும் நல்கியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேல் செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலித் திட்டம் ஒன்றை

ஏற்படுத்தி, ஏறத்தாழ ஒன்றரை இலக்கம் உருபாவை அவருக்குத் தண்டிக் கொடுத்து, அத் திட்டம் நன்கு வேரூன்ற வழி வகுத்தது. இதைத் தென்மொழியிதழ்களைத் தொடர்ந்து படிப்பவர்கள் தெரிந்திருப்பார்கள்.

11. அகரமுதலித் திட்டம் முதன் முதல் தென்மொழியில் தான் உருவாக்கம் பெற்றதா? எப்போது?

11. ஆமாம்; *1970*-ஆம் ஆண்டில் (தென்மொழி சுவடி *8*; ஓலை: *8-9*)

12. அகரமுதலித் திட்டத்தை உருவாக்க முதன் முதல் எண்ணங் கொண்டது யார்? ஏன்?

அகரமுதலித் திட்டத்தை உருவாக்கியது மட்டுமன்று, இப்படி ஓர் அகரமுதலி உருவாக்க வேண்டும் என்று பாவாணரைக் கேட்டுக் கொண்டதே தென்மொழிதான்.

13. பாவாணர் படைப்புகளில் தங்கள் உளங்கொண்டது எது? அதற்குரிய கரணியம் யாது?

பாவாணர் படைப்புகளில் மிக மிகச் சிறப்பானவையும், இன்றியமையாதவையும், தமிழர்களுக்குத் தேவையானவையும், வழிகாட்டிகளாக அமைவனவும் அவரின்,

1. ஒப்பியன் மொழி நூல்
2. முதல் தாய் மொழி
3. திரவிடத்தாய்
4. தமிழ் வரலாறு
5. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
6. The Primary classical Language of the World
7. தமிழர் வரலாறு
8. வடமொழி வரலாறு
9. தமிழர் மதம்
10. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள்

—ஆகிய நூல்களே! இவை ஒவ்வொன்றும் அவரின் ஒவ்வோர் ஆராய்ச்சி அறிவை வெளிப்படுத்துவனவாகும்.

14. பாவாணர் 'திருக்குறள் தமிழ் மரபுரை' பற்றிய தங்கள் மதிப்பீடென்ன?

இது தொடர்பாக நான் ஏற்கனவே 'தென்மொழி'யில் ஒரு தொடர் மதிப்புரை எழுதினேன். ஆனால் சில கட்டுரைகளுக்குப் பின் அதைத் தொடர முடியாமல் போய் விட்டது. மிகவும் சுருக்கமாகக் கூறுவதானால், வரலாற்று நிலையில் அஃது ஒரு திசை திருப்பம். திருக்குறள் சிலவற்றுக்குச் சில புதிய வரலாற்று அடிப்படையான உரைகள் கிடைத்தன. தூய தமிழில் உரைகள் உள்ளன. விரிவாகச் சொல்வதானால் விடை நீளும்,

15. பாவாணர் தமிழ்மரபுரை எழுதியபோது, "ஐயா அவர்கள் தமிழ்மரபுரை எழுதிவிட்ட பிறகு 'இனி யாரும் திருக்குறட்கு

உரை எழுதக் கூடாது" என்று கூறிய தாங்கள், திருக்குறட்கு உரை எழுதப் போவதாகத் தென்மொழி இதழொன்றில் குறிப் டுள்ளீரே - ஏன்?

'பாவாணர் திருக்குறள் தமிழ் மரபுரை'- வெளிவந்த பொழுது, அது, அதற்கு முன்னிருந்த உரைகளைப் பார்க்கினும், தூய தமிழிலும், வரலாற்று அடிப்படையிலும், மதஞ்சாராத் தன்மையிலும், பகுத்தறிவுக்குப் பொருந்திய வகையிலும், தமிழின மரபைத் தழுவிய நிலையிலும், சிறிதளவு முன்னேற்றமான தன்மையில் விளங்கியதால், அதற்கு நான் கொடுத்த சிறப்புப் பாயிரத்தில், பாவாணர் உரைக்குப் பின்,

> மற்றோர் உரைசெயவும் மாணுவரோ? மாணுவரேல்
> கற்றோர் நகைப்பர் கலித்து,

—என்று எழுதியிருந்தேன். இதில், ஒன்று போலவே பலரும் உரை செய்யும் தன்மையைக் குறிப்பால் சுட்டியே, அவ்வகை யான உரைகளுக்கு வேறான வகையில் பாவாணர் உரை வந்துள தால், இனிமேலும் பழைய முறையிலேயே, இன்னோர் உரை திருக்குறளுக்குத் தேவையில்லை என்னும் கருத்தை வெளியிட் டிருந்தேன்.

ஆனால், நான் 1976-ஆம் ஆண்டு இந்திய அரசியல் நெருக்கடிக் காலத்தில், சென்னை நடுவண் சிறையில், ஓராண்டு சிறை வைக்கப் பெற்றிருந்த காலை, பகவத் கீதைக்குப் பெரும்புலவர் ஒருவர் மராட்டியத்தில் எழுதிய விளக்கவுரையின், தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றைப் படிக்க நேர்ந்தது. நூல் மிகவும் பெரியது; ஈராயிரம் பக்கங்களுக்குமேல், மிகவும் வியக்கத்தக்க முறையில் பகவத் கீதையின் உள்ளுறையை மெய்ப் பொருள் தன்மையில், சிறப்பான வகையில் விளக்கமாகக் கூறியது.

அதைப் படித்த பின்னர்தான் பகவத் கீதைக்கே இத்தகு மெய் விளக்கவுரை கூறப்பெறுமானால், திருக்குறளுக்கு அதைவிட விரிவாகவும் விளக்கமாகவும் மெய்ப்பொருள் தன்மையில் உரை செய்ய முடியும் என்றும், அதை நாம் செய்ய இயலும் என்றும் கருத்துத் தோன்றியது.

பின், சிறையிலுள்ள பொழுதே, அது பற்றித் தீவிரமாக ஆராய்ந்து, திருக்குறளுக்கு ஏறத்தாழ, ஐயாயிரம் பக்கங்கள் (கூடினாலும் கூடலாமே தவிர, குறையாது) கொண்ட, மிக விரி வான விளக்கவுரை வரைய வேண்டும் என்று உறுதி செய்து கொண்டு, அந்த முயற்சியையும் அங்கேயே தொடங்கி விட்டேன்.

இந்த உரை நூலுக்குத் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை' என் றும் பெயர் கொடுத்தேன்; இவ்வுரை நூலுள் ஏறத்தாழ ஐம்பதினாயிரம் குறிப்புரைகளும், எடுத்துக் காட்டுகளும் வரும். திருக்குறளுக்கு முன்னும் பின்னும் எழுந்த பெரும்பாலான நூல் களும், அறிவியல், மருத்துவம், மனவியல், மாந்தவியல், உடலி

யல், வரலாற்றியல், மொழியியல் தொடர்பான நூல்களும் ஆய்ந்து மிகக் கவனமாக உரைகளுள் கருத்துகளை விளக்கப் பயன்படுத்தப் பெறும். சுருக்கமாகச் சொல்வதானால், இந்நூல் வெளிவந்த பின்னரே, இதன் இன்றியமையாமையும் பெருமை யும் நன்கு உணரப் பெறும்.

தமிழின நலங் கருதிய ஒரு வரலாற்றுத் தேவையின் அடிப் படையில் இவ்வுரை எழுதப் பெறுவதாகக் கருதப் பெற வேண்டுமேயல்லாமல், எதற்குமோ, எவருக்குமோ போட்டியாக எழுதப் பெறுவதாகக் கருதுவது, அறியாமையே ஆகும்.

16. பாவாணர்தம் பாடறிந்தொழுகும் பண்புநலன்கள் யாவை?

பாவாணரிடம் நான் கண்ட சிறந்த பண்புகள், முதலில் அவரி டம் உள்ள எளிமை. இரண்டாவது எவரிடத்தும் அன்பு பூண்டு இனிமையாகப் பழகும் தன்மை. மூன்றாவது ஒரு சிறு உதவி பெறினும் பெரிதாக மதித்து, நன்றி காட்டும் சிறந்த பண்புடைமை.

17. பாவாணர்க்கும் தங்கட்கும் அவர்தம் வாழ்நாள் இறுதி வரை கேண்மை நன்னிலையில் இருந்ததா? இல்லையெனில் மாறு பாட்டுக் கரணியம் யாது?

பாவாணரிடத்து நான் கொண்ட அன்பும் மதிப்பும் தொடக் கக் காலத்துக் கொண்டதைப் போலவே ஒரு சிறு மாறுபாட்டை யும் ஏற்படுத்திக் கொள்ளாமலே இருந்தன என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆனால், அவரும், அவர் அறிவாற்றலும் அனைவர்க்கும் அறி முகமாகிய பின்னர், அவரிடம் தொடர்பு கொண்ட பலருள், அவரால் பயன்பெற விரும்பிய தந்நல நோக்கங் கொண்ட சிலர் (இவருள் அரசியல் தலைவர்களும் ஓரிருவர் அடங்குவர்) இருவர் நட்பிலும் சில பூசல்களை விளைவித்தனர். இதனால் என்னைப் பற்றி சில தவறான கருத்துகளை அவர் உள்ளத்தில் ஊன்றினர். கள்ள- மற்ற அவரின் குழந்தை உள்ளம் அவற்றை ஆராய்ந்து பாரா மலேயே ஓரளவு நம்பியது. ஆனாலும் அதை எவ்வழியும் வெளிப் படுத்தவில்லை. இருப்பினும் அவர் நடைமுறையில் சில மாறுதல் கள் தெரிந்தன.

நாளடைவில் அவர் கொள்கையிலும் சில நெகிழ்ச்சிகள் தெரியவந்தன. இவை பற்றி அவர்க்குத் தெரிவித்தேன். ஆனால் அவர் இவற்றுக்கு நேரடியாக விளக்கம் சொல்லாமலே இருந் தார். அவர் மறைவுக்கு ஒரு மூன்று மாதங்களுக்கு முன்னரே நடந்த இப் பூசல், பிறகு இறுதிப் பூசலாகவே ஆகிவிட்டது. இவற்றின் விரிவான விளக்கங்கள் பின்னர் தேவையான பொழுது வெளிப்படுத்தப் பெறும்.

18. பாவாணர்தம் சொல்லாய்வு பற்றிய தங்கள் கருத்து யாது?

பாவாணரின் சொல்லாய்வு, ஞானப்பிரகாசருடைய மொழி யாய்வுக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், அவரினும் களம் விரிந்தது. பாவாணரின் முழு ஆய்வறிவும் வெளிப்படுத்தப் பெறாமலே போயின. சுருக்கமாகச் சொல்வதா னால் தமிழ்மொழியாய்வு, சொல்லாய்வு, வேர்ச் சொல் ஆய்வு, பிறமொழி ஒப்பீட்டாய்வு என்னும் பரந்து பட்ட, ஆய்வுக் களரி யுள் அவர் வெளிப்படுத்திய ஆய்வுக் கருத்துகள் ஒரு முன் னுரையே!

19. பாவாணர் குறை நிறைகளாகத் தாங்கள் கருதுவன வற்றைக் கூறுங்கள்.

இதுவரையிருந்த தமிழறிஞர்களுள் அவர் ஓர் ஆராய்ச்சி மலை. அவரைப் போல், இதுவரை, தமிழ் மொழிக்காக எவரும் தம்மை முழுமையாக ஒப்புக் கொடுத்ததில்லை. தம்மைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாது தமிழ் பற்றியே நினைந்து நினைந்து வரலாறாகிப் போனவர் அவர். அவரிடம் இருந்த ஓரிரு குறைகளுள் தலையா யது எல்லாரையும் எளிதில் நம்பிவிடும் குழந்தை உளத்தினர் அவர் என்பதுதான்.

20. பாவாணர் பாசறை மறவர்களாகிய தூய்தமிழ்ப் பற்றாளர்கட்கு, பாவாணர் கொள்கையை நிலைநாட்ட ஆற்ற வேண்டிய அருந்தொண்டுகளாகத் தாங்கள் கொளுத்தும் அறி வுரை யாது?

பாவாணர்க்கென்று தனிக்கொள்கை எதுவும் இல்லை. தமிழ் தான் அவர் கொள்கை. தமிழ் அனைத்து நிலைகளினும் விடுபட்டுத் தனித்தியங்கி, உலகின் மூல முதல் மொழியென்று, பிற நாட்டா ரும் ஒப்பும் அளவுக்கு, மெய்ப்பிக்கப் பெற்று, நிலைநாட்டப் பெறல் வேண்டும் என்பதுதான் அவரின் வாழ்வியல் கொள்கை. இத்துறையில் உழைக்கின்ற உண்மையான, நேர்மையான, நடு நிலையான தமிழாய்வறிஞர்களுக்குப், பாவாணரிடம் காட்டிய அன்பையும் ஆதரவையும் தந்து, தமிழ் மேம்பாட்டிற்கு வழி கோலுவதே, அவரிடம் உண்மையான அன்பும், மதிப்பும் கொண்டவர்களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் அன்பர்களுக்கு நான் கூறுகின்ற அறிவுரையாகும். இந்நிலையினின்று தாமும் அவர்களின் ஒவ்வொரு முனைப்பும், வினைத்திறமும், தமிழ்மொழி யின் முன்னேற்றத்தைப் பல படிகள் தாழ்த்திவிடும் என்பதை, அவர்கள் தந்நலமற்ற நோக்குடன் ஒப்புக் கொள்ளுதல் வேண்டும்.

பெருஞ்சித்திரனார்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

-அமைச்சர்.

தாய்நாட்டை மீட்பதும் இன்றே!

--வள்ளிகேள்வன்.

எத்துனைத் துன்பம் ஏற்படும் எனினும்
இன்முக மாய்நாம் ஏற்போம்:
இத்தரை மீதில் தாய்த்திரு நாட்டை
இந்தநூற் ருண்டிலே மீட்போம்!
எத்திடும் தீய வடவரின் சூழ்ச்சி
எரிபடும் பஞ்சுபோல் தீய்ப்போம்!
முத்தமிழ் வீறு பாரெலாம் விளக்கி
மூச்சுயிர் கிளர்ந்திட ஆர்ப்போம்!

வாயவிழ்க் கின்ற அரசியல் தலைவர்
வஞ்சனைச் செயலெலாம் முறிப்போம்!
நோயவிழ்க் கின்ற 'இந்தி'யாம் குரங்கு
மொழியதன் இடுப்பினை ஒடிப்போம்!
பாய்விரிக் கின்ற பரத்தையர் போல
நடிப்பவர் கவர்ச்சியை அறுப்போம்!
தாய்மொழிக் கிங்கே தடையெவர் செய்வர்?
செய்வரேல் தாளின்கீழ் மிதிப்போம்!

காவிரிச் சிக்கல், பட்டினி, வறட்சி,
காடுகள் அழிந்திடும் கோலம்;
சாவினை நோக்கும் வறியவர் கோடி,
தமிழகம் எங்கிலும் ஓலம்;
பூவிரிக் கின்ற விளம்பரப் பகட்டில்
பொய்யரின் ஆணவச் சிரிப்பு;
நோயிலே துடிக்கும் வேளையில் தில்லி
நொய்யரின் நாய்மொழித் திணிப்பு!

''இந்தி'தான் இங்கே இந்திய நாடு'
எனவட வன்உரைக் கின்றான்.
சிந்தையில் ஒப்பி ஆள்பவன் அடச்சீ!
தெற்கிலே பல்லிளிக் கின்றான்;
மந்தியா தமிழ மாந்தரே! நீங்கள்
பகுத்தறி வுள்ளவர் என்றால்
சிந்தனை செய்வீர் ஓரணி திரள்வீர்!
சிறுக்கரின் முகத்திரை கிழிப்பீர்!

ஈழநாட் டகத்தில் தாயின மாந்தர்
இன்னல்கள் நாம்களைந் தோமா?
கோழையாய் வடவன் கால்களை நக்கும்
கூழையர் தமைத்தெளிந் தோமா?
வாழும்நம் வீட்டை உரிமைகொள் ளாமல்
திண்ணையை இரப்பது மாண்பா?
ஊழ்வினை ஏதிங்(கு) உன்வினை திருத்து;
தாயகம் மீட்களந் தமிழா!

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

கோடுகள் இல்லாத கோலங்கள்!

க. அ. ஔியவன்.

கட்டளைக் கலித்துறை

நாடும் மொழியும் நமதிரு கண்கள் எனப்புகன்றே
பீடும் பெருமையும் பேணிக் களிப்புறும் போதினிலே
ஏடும் எழுத்தும் எழில்தமிழ் இல்லையென் றுகிவிட்டால்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

சூடும் சொரணையும் சுண்டை யளவுமில் லாதவராய்
ஆடும் படியெல்லாம் ஆடிப் பிறருக் கடிமைப்பட்டே
நீடு பெரும்புகழ்ப் பேறெலாம் விட்டு நிலைத்ததனைக்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

கூடும்தன் மானமும் கொஞ்சு தமிழும் குருதியொடே
ஊடும்நல் பாவும்போல் ஊறிப் பிறங்கிட வில்லையென்றால்
ஆடுகள் மாடுகள் மேலென்று சொல்லி அருந்தமிழர்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

வீடும் மனைவியும் மைந்தரும் மற்றுந்தன் சும்பியுமே
நாடும் நினைவினில் நற்றமிழ் அன்னையை நாள்களெல்லாம்
வாடும் நிலையினுக் கேவிட்டு வைத்திட்ட வன்னெஞ்சங்கள்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

ஓடும்பொய் வாழ்க்கையை ஓடிப் பிடிக்கவே ஓடோடி
கேடுங் கயமையும் கீழ்மைச் செயல்களும் கோடிகோடி!
தேடும் பிறவிக ளேயிந்தத் தேயத்தில் தீமைவளர்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

காடு கமழ்நறுங் கற்பூரச் சொற்பொருள் கண்டெடுத்தே
பாடிவைத் துள்ள பழந்தமிழ்ப் பாக்கள் பலப்பலவும்
தேடி யெடுத்துத் திளைத்தின்பம் எய்தாத் தமிழ்நெஞ்சங்கள்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

ஈடிணை யற்ற தனித்தமிழ்ப் பெட்டக மாயிலங்கும்
பீடிணை பாவல ரேறெனும் நம்பெருஞ் சித்திரனார்
பாடிய நற்கனிச் சாறு பருகாதோர் இக்காலத்தில்
கோடுகள் இல்லாத கோலங்க ளாமென்று கூறுகவே!

(முன் பக்கத் தொடர்ச்சி)

தாய்க்கொரு மகனாய்ப் பிறந்தநற் றமிழர்
தமிழின் வீறுடன் எழுவீர்!
நாய்க்கொரு மகனாய் இருந்திட விழைவோர்
நாயென வடவர்கால் விழுவீர்!
தூக்கவே வேண்டும் துமுக்கியை என்னில்,
தூக்குவோம் தயக்கமே யில்லை!
தாய்த்திரு நாட்டை மீட்பதும் இன்றே
பெற்றதாய் மீதினில் ஆணை!

நாடகம் : [தொடர்-16]

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்களின் பாவியம்.)

காட்சி கக.

வள்: இதற்கு இசைந்தாளா அந்தக் குடும்பத் தலைவி!

மரு: இசையாமல் என்ன செய்வது? சரி என்றாள். இந்த வேலைக்கு அவளை அனுப்ப ஒப்பினாள். அந்தக் கோணல் கொண்டைக்காரியோடு அத் தலைவி அனுப்பினாள்.

வள்: அப்படியானால், அவளும் போனாள் என்று சொல்.

மரு: ஆமாம். ஆமாம். இனிப் பஞ்சம் நீங்கும். கஞ்சியாவது கிடைக்கும்; செல்வர் வீட்டில் வேலை, எனவே தேனுணவு உண்ணலாம். சோற்றுக்குக் குறைவுவராது. வடித்த கஞ்சியைக் காணாத அவளுடைய அக்காளின் குழந்தைகள் இனித் தின்று கொழுக்கும், என்றெல்லாம் நினைத்துக் கற்பனையில் நடந்தாள். அவளுக்குப் பின்னாலே நடந்து போனாள்.

வள்: வருவாய் ஒன்றுமில்லாமல் இருந்ததற்கு இஃதாவது கிடைத்ததே என்று நினைத்திருப்பாள்? சரி. பிறகு.

மரு: அந்தக் கோணல் கொண்டைக்காரி முன்னால் நடக்க அந்த இளநங்கை அவள் பின்னாலே சென்றாள்; இதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லவே உடல் நடுங்குகிறது.

வள்: அப்படி என்ன நடந்தது?

மரு: அந்தக் கோணல் கொண்டைக்காரி அந்தப் பெண்ணை அன்புகாட்டுவதுபோல நடித்து அழைத்துச் சென்று ஒரு வளமனைக்குள் தள்ளிவிட்டு வெளியே ஓடியேவிட்டாள்.

வள்: செல்வர் வீட்டில் வேலை என்று சொன்னது பொய்யா?

மரு: பொய்தான். அந்த மனைக்குள் கள்ளைக் குடித்துவிட்டுக் கண்சிவக்கக் கரடிபோல நின்று கொண்டிருந்தான் அந்தக் கரியன் கருப்பணன்.

வள்: ஐய்யய்யோ! ஒரு பெண்ணே இன்னொரு பெண்ணுக்கு இரண்டகஞ் செய்து விட்டாளே!

மரு: கேள் வள்ளி; அவளை இழுத்தான். கட்டிப்பிடித்துக் கற்பை அழித்தான். அப்பெண் காப்பதற்கரிய கற்பை இழந்து துவண்டாள்; துடித்தாள்; உயிரைப் போக்க எண்ணினாள். முடியவில்லை. அந்த முரட்டு விலங்கு மீண்டும், மீண்டும் குதறும் நாய்போலக் காமவெறியில் கட்டி அணைத்துக் கடித்து உதறினான். மாலைவரை எங்கிருக்கிறோம் என்றறியாமல் மயங்கிக் கிடந்தாள். பின்

மயக்கம் தெளிய, எழுந்து பார்த்தாள். அந்தத் தடியன் செக்குலக்கைபோல நின்று கொண்டிருந்தான். கையில் இருந்த கத்தை கத்தையான பணக்கட்டை வெண்சுருட்டைப்(சிகரெட்) புகைத்துக் கொண்டே இந்தா என்று அவள் நெஞ்சில் வீசி எறிந்தான். பல்லைக் காட்டினன். வெடிஒலி போலச் சிரித்தான். தரையில் விழுந்த பணக் கட்டையெடுத்து அவள் நெஞ்சுக்கு நேரே நீட்டினன்.

வள்: அவள் அவன் கொடுத்த பணக்கட்டை வாங்கிக் கொண்டாளோ!?

மரு: வாங்கி இருக்கக் கூடாதுதான். ஆனல் வாங்கிவிட்டாள். அந்த நேரத்தில் அவளக்காளின் வறுமைத் துயர் நினைவிற்கு வர, அக்காளுடைய வாழ்வு வளம் பெறட்டும் என்று எண்ணிக் கை நீட்டி வாங்கி விட்டாள்.

வள்: விலைமதிக்கற்கரிய கற்பிற்கு விலைவைத்து விட்டார்கள். காதலையும் கற்பையும் இனி யார் காப்பாற்றுவது?

மரு: அவளுக்கு வந்த துன்பம் தனக்கென்ற இன உணர்வு இருந்தால் காப்பாற்றலாம்; அவ்வுணர்வுதான் இல்லையே.

வள்: தன்மானத்தை இழந்து கருப்பணனிடமிருந்து கையூட்டு வருமானத்தைப் பெற்றுக் கொண்டு அவன் செய்யும் குற்றங்களை ஆராயாமல் அவனை விட்டு விடுகிறார்கள். மானத்திற்காக வாழாதாரிடம் நல் உணர்வுகள் இருக்கவே இருக்காது. ஞாயமும் பேச மாட்டார்கள். மருக்கொழுந்து, அதற்குப் பின் அந்தப் பெண் என்ன செய்தாளாம்?

மரு: அவளுடைய அக்காளிடம் அந்தப் பணக்கட்டைக் கொடுத்து, அவளுடைய துன்ப நிலையை நீக்கிவிட ஓடிச் சென்றாள். வள்ளி...(அதற்குமேல் பேச முடியவில்லை. நிற்கிறாள்).

வள்: கொழுந்தே, என்ன நடந்தது?

மரு: என்ன நடக்கும். இந்தக் கொடுமைவழி வந்த பணத்தை வேண்டாம் என்று கூறுவதைப்போல அந்தப் பெண்ணின் அக்காள் செத்துக் கிடந்தாள்.

வள்: ஆ!

மரு: ஆமாம், அதுமட்டுமன்று, அந்தத் தலைவிக்குப் பின் அந்தக் குடும்பமே ஒருவருக்குப்பின் ஒருவர் வறுமைக்கு இரையாகி மடிந்து போயினர்.

வள்: அய்யய்யோ! அப்படியானல் அந்தக் கற்பிழந்த பெண் என்ன ஆனாள்?

மரு: (எழுந்து நின்று) அவள்தான் உன்முன்னல் நின்று பேசிக் கொண்டிருக்கும் அவலப் பெண் மருக்கொழுந்து.

வள்: ஆ! (அதிர்ச்சியில் வாயை மூடிச் சாய்ந்துவிட்டாள்).

மரு: ஐயோ; என்னைக் கண்டு நீயும் சாய்ந்து விட்டாயா? கொடுமைகளைத் தடுக்க எண்ணுது சாய்ந்து மாளுவதா? வீரம் கொடுமைகளை எதிர்க்க வலுவற்றுக் கிடப்பது சரியில்லை. தீவினைகளைக் கண்டு அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருந்தால் கொடுமை எப்படி என்றைக்கு ஒழியும்? (சாய்ந்து கிடக்கும் வள்ளியைத் தண்ணீர் கொண்டு தெளித்துத் தூக்கி) வள்ளி (தட்டி) எழுந்திரு. என்னைப்பார்.

வள்: (வள்ளி எழுந்து பார்த்து) நீயா என்னைத் தூக்குகிறுய்? படுகுழியில் வீழுந்த உன்னைத் தூக்கிவிட ஒருவரும் இவ்வுலகில் இல்லையே;

மரு: தூக்கிவிட ஆளில்லாவிட்டாலும், என்னைத் தூற்ற ஆட்கள் உண்டு.

வள்: உண்மை. உனக்கு மட்டுமன்று; எத்தனையோ பெண்களைக் கொடுமைப்படுத்திய கருப்பணனை ஏன் என்று கேட்க இந்த ஊரில் யாருமில்லையே!

மரு: இருக்கிறுர்கள். கடாக் கொம்பு மீசையை முறுக்கி திண்தோளை உயர்த்தி வெற்று வீரம் பேசும் ஆண் போல உள்ளவர்கள் மிகுதியாகவே உள்ளனர். ஆனுல் அவனுடைய கொட்டத்தை அடக்கத் திறலோன் எவனுமில்லை. மன்றத்தாரே அஞ்சுகிறுர்கள். ஏன் தெரியுமா? கருப்பணன் செய்யும் கொடுமைகளை எதிர்ப்பவரை ஆலம் விழுது போலக் கட்டி மரத்தில் தொங்க விடுகிறுன். இவனுடைய தவறுகளை உறுதிப்படுத்தச் சான்று கூறும் உண்மையரைக் கொன்று விடுவான். அதற்காக அவன் குற்றத்தைக் கூற அஞ்சுகின்றனர். இவன் கொடுஞ்செயல்களைப் பேசிய ஆண்களையும், பெண்களையும் கொன்று வெள்ளத்தில் விட்டிருக்கிறுன்- தெரியுமா? ஊர் மன்றத்தாருக்கு இவனுடைய கொடுமை தெரியும்; என்றுலும் அதை உறுதிப்படுத்த ஆண்மை மிக்கோன் இல்லாததால் அவனை ஒன்றுஞ் செய்யமுடியவில்லை. சலிப்படைந்து விட்டனர். சாம்பிப் போனவர்களுக்குக் கை கொடுத்து, வெற்றிபெற ஒருவரும் இலர். வள்ளி; நேற்று நடந்த கண்ணையனைக் கொன்ற வழக்கைப் பற்றி உனக்குத் தெரியுமா?

வள்: வழக்கா! யார் மேல்?

மரு: உன் காதலன் சிங்கன் மேல்.

வள்: என்ன!?

மரு: ஆமாம். கண்ணையனைக் கொன்றது சிங்கனென்று சொன்ஞனும் அந்தப் புல்லறிவாளன் கருப்பணன். சிங்கனைக் காட்டிக் கொடுத்தானும்!

வள்: சிங்கனு கண்ணையனைக் கொன்றவர். இது திரிபு. என் கண் முன் கருப்பணனே கண்ணையனை ஒழித்தானே. மருக்கொழுந்து மன்றத்தார் என்ன நினைக்கிறுர்கள்?

ஒரு கருத்து மடல்:

முதலில் நாம் தமிழர் என்க!

பேரன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய ஐயா அவர்களுக்கு, வணக்கம். தென்மொழிச் சுவடி 22 ஓலை 12-இல் திருச்சி திரு. துப்பாக்கி தி. அன்பழகன் அவர்களின் மடலைப்படித்தேன். எவ்வளவுதாம் அறிவாளர்களாக -சிந்தனையாளர்களாகவிருப்பினும் சிலர் சில பாதைகளில் அல்லது துறைகளில் அல்லது நிலைகளில் தவறி விடுகின்றனர். தமிழகத்தில் மட்டிலுமன்று உலகின் பிற பகுதிகளிலும் வாழ்கின்ற தமிழர்களும் தம்மை இந்துக்களாகவே கருதுகின்றனர் என்னுங்கூற்று உண்மையே. இதற்குக் கரணியமென்ன? உலகின் எந்த மூலையிலும் எவ்வளவு ஏந்து நிறைவுகளுடன் வாழ்ந்தாலும், தமிழர் வறிய தமிழ் நிலத்தைத்தான் தம் தாய் நிலமாக -உறவாக- வழிகாட்டியாகக் கருதுகின்றனர். இந்தத் தமிழகத்தின் நிலைமைகள்தாம் உலகின் பிற பகுதித் தமிழரைத் தாக்கஞ் செய்கின்றன என்பதை உணருதல் வேண்டும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மரு: வழக்கு நடக்க வேண்டிய நாளை மாற்றி வைத்து விட்டார்கள். நாளையே தெரியும்.

வள்: ஐயோ! எனக்குத் துன்பத்தைத் தந்து விடுவார்களோ? நெறி கொன்றவனைக் கொண்டுவா என்றதும் அவனைத் துண்டு செய்யும் மறவர், பண்டு வாழ்ந்த நாடு இது. அக்கால ஞாய உணர்வு படைத்தவர் முறையற்றவனைக் கட்டிவா என்றதும், அவன் தலையை வெட்டி வந்த வீரர் மலிந்த நாடு இது! ஏ! தமிழ்நாடே! வாழைத்தண்டைக் கண்டு பாம்பென்றஞ்சும் சூம்புத் தோளரைப் பெற்று விட்டாயோ? மருக்கொழுந்து! தமிழ்நாட்டுப் பெண்கள் வரலாறு இவ்வுலகத்திற்கே ஊக்கந்தந்தது. கேள். போர்க்களத்திற்கு ஒரு தாய் தன் மகனை அனுப்பினாள். எவனோ அத் தாயிடம் வந்து உன் மகன் புற முதுகு காட்டி ஓடிச் செத்தான் என்றதும், அந்தத் தாய் என்ன செய்தாளாம் ''என் மகன் அப்படிச் செத்திருந்தால் அவன் பாலுண்டு வளர்ந்த இந்த மார்பை அறுத்தெறிவேன்.'' எனக் கூறி ஓடித் தன் மகன் மார்பில் புண்பட்டுக் கிடந்ததைக் கண்டு மகிழ்ந்தாளாம். அது போலும் தாய்கள் இப்போது இல்லை போலும். வீரக் காளைகளைப் பெற்றவர் இன்று கோழைகளைப் பெற்று விட்டனரே! கருப்பணன் கொலைஞன்! அவனுக்கஞ்சி எத்தனை நாள்களாக அவனை விட்டு வைத்திருக்கிறார்கள். பெண்ணைப் பெருமைப்படுத்திக் காத்த பெருமைகள் எங்கே? ஐயோ நல்ல ஒழுக்கங்களைக் கெடுக்கும் கருப்பணன் போன்றவரை வாழவிடும் கோழைகளை ஊக்கப்படுத்தி உணர்வேற்ற இனியார் வருவார்? உறங்கும் தமிழ்நாட்டை உசுப்பிவிட இங்கிப் பேராண்மையினர் இல்லையோ?

(தொடரும்.)

இங்கே நாம் எப்படி நடந்து கொள்கிறோமோ அதுவே அங்கெல்லாம் எதிரொலிக்கின்றன. இங்கு நாம் தமிழர்களாய் இருப்போமானால் உலகத் தமிழர்களும் தம்மைத் தமிழர் என முழுவதுமாக எண்ணுவார்கள். இந்தத் தமிழகத்தைத்தான் இவ்வுலகத் தமிழினம் முன் மாதிரியாய்க் கொள்கின்றது. எனவே, முதலில் நாம் அனைத்துநிலைகளிலும் தமிழர் என்பதை நம் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திக் காட்டுவோம். ஆனால், ஒன்று. தமிழர் என்றால் இறைமறுப்பாளராகத்தாம் இருத்தல் வேண்டும் என எதிர்பார்த்தல் கூடாது. இறையுண்மைக் கருத்துடையோருந் தமிழர்தாம். சிவனியமும் மாலியமும் இந் நிலத்தின் இரு பெருந்தனித் தன்மையான சமயக் கொள்கைகள் ஆவனவாம். இங்கு வழக்கிலுள்ள இறைப்பெயர்களும் இந் நிலத்துக்குரியனவே. இவற்றிலெல்லாம் ஊடுருவல்கள் நிகழ்ந்துள்ளன. இவ்வூடுருவல்கள் அகற்றப்பட்டு முழுத் தனித்தன்மைக் கொள்கையும், முறைகளும் பின்பற்றப் பெறல் வேண்டும். அதன்பின் உருவமற்ற பேரிறையாற்றல் போற்றிக் கொணரப் பெறல் வேண்டும். அப்பொழுது பார்த்தால் அதன் தாக்கம் உலகின் பிற பகுதிகளிலும் நிலை கொள்வதையறியலாம். அதற்கு முன் ஒன்றை நம் நினைவிற் கொள்ளுதல் நல்லது. இறை உண்டா, இல்லையா என்பதில் நாம் நம்முடைய நேரத்தை வீணடிக்காமல் மொழியின நாட்டுயர்விற் கருத்துச் செலுத்துதல் வேண்டும். இறை உண்மையென்போரும், இன்மையென்போருமாகிய இருதிறத்தாரும் தமிழர்தாம் என்பதை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இவ்விருதிறத்தாரும் ஒற்றுமையோடிருந்தால் நாட்டின (தேசிய) ஒருமைப்பாடு காணமுடியும்; ஒரு விடிவு உண்டாகும்.

இந்து மதத்தைவிட்டு வெளியேறுவது என்றால் பிற மதங்களுக்கு மாறுவதுதான் என்று பொருள் கொண்டால், அஃது இந்து மதத்திலிருப்பதை விடக் கொடுமையானது என்பதைப் பட்டறிவினால் அறிந்திருக்கலாம். இன்று இந்து மதத்திலுள்ள தமிழர்கள் தம் முழு அறிவுத் தெளிவோடுதான் அதிற் சேர்ந்திருக்கிறார்கள் எனத் தீர்மானிக்கக் கூடாது. தமிழர்தம் ஒப்புதலின்றியே ஆங்கில அரசினரால் ஒட்டு மொத்தமாக இந்து மதத்துக்குப் பட்டிகை (பட்டிகை- LIST; பட்டியல்- BILL) மாற்றம் செய்யப்பட்டவர்களே என்னும் அடிப்படையான உண்மையை அறிதல் வேண்டும். இல்லையானால், உயர்குலத்தினரான பார்ப்பனரும் அவர்தம் அடிவருடியரும் குமுகாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எனப்பெறும் குலத்தினரையும் தம் இயக்கமான மதத்தில் சேர்த்துக் கொள்வார்களா? எவ்வளவு காலம் தாழ்த்தப்பட்டவர்களைக் கோவில்களுக்குள் நுழைய விடாமல் தடுத்து கொண்டிருந்தார்கள், இந்த ஆவின் தோற்போர்த்திய புலிகள்? இன்றும் சில இடங்களில் இக் கொடுமையிருப்பதை இந்த இருபதாம் நூற்றாண்டுக் குமுகாயம் அறிந்து கொண்டும் கையறு நிலையிற்றானே இருக்கின்றது? ஆனால், போலிக் கண்ணீர் வடிக்கின்றனர் இன்று பலப்பல முன்னணிகளை அமைத்துக் கொண்டு. இருப்பினும், இன்றில்லா விட்டாலும்

என்றுவது ஒருநாள் ஆவணங்களின்படி இந்துக்களாக இருக்கும் நாம் தமிழர்கள் என்று மீண்டும் பட்டிகை மாற்றம் பெற வாய்ப் புள்ளது. இதை விடுத்துப் பிற மதங்களுக்கு மாறினல் மதம் மதம் என்று பகுத்தறிவை இழந்து மக்கள் தம் அன்றாட வாழ்க் கையின் ஒவ்வொரு சிறு நிகழ்விலுங்கூட முழு மூட நம்பிக்கையே குடிகொள்ளும். உடம்புக்குக் காய்ச்சல் என்றாற் கூடப் பேய்க் கோளாறு என்று நம்பி மருத்துவம் ஏதும் பார்க்க முயலாமல் குழு வழிபாடு போன்றவற்றைச் செய்யும் நிலைமையே ஏற்படும். மேலும், மொழிக்கலப்பும், மாறுபட்ட பழக்க வழக்கங்களும், உடைமாற்றங்களும், நீட்டல் மழித்தல் போன்றவையும் ஏற் பட்டு வேற்றுமொழிக்கு மாறியும் வேறு இனத்துக்கு மாறியும் போகும் நிலைமையும் ஏற்படலாம். மதம் என்றால் எந்த மதமா னல் என்ன, அது மதம் தான். கத்தி, அரிவாள், வாள், அரிவாள் மணை இவையுள் எதினல் காயப்பட்டாலும், குருதி வெளியேறுவ துறுதி. எனவே மதம் மாறவேண்டும் என்று மக்கள் வற்புறுத் தல் வேண்டாம்.

உயர்குல (சாதி) இந்துக்கள் என்போர் அவர் தம் மதவழக்கங் களின்படி திருநீறு பூசிக் கொண்டோ, சந்தனத்தைக் கொண்டு அல்லது கொங்காரத்தைக் கொண்டு பொட்டிட்டுக் கொண்டோ நாமம் அருவிக்கொண்டோ இருப்போர் மட்டிலுமல்லர். எந்த வகைப் பூச்சுமற்றவர்களாய் நம்மிடையிலுமிருக்கின்றார்கள். ஆம், நம் இயக்கங்களான அறிவியக்கங்களிலும் தம்மை உயர் குலத்தினர் என எண்ணிக் கொள்ளும் மேதாவிகள் பெருஞ்சாய்-கால்களுடன் உலா வருகின்றனர். பலருமறிய மேடையில் அஃதா வது அம்பலத்தில் முழங்குவது ஒன்று. அணுக்கத்தில் அறையிற் பேசுவது மற்றொன்று. அந்த நேரங்களில் மாந்தர்களின் பெயர் களுக்குப் பகரமாக நாய்க்கர், சைவப்பிள்ளைமார் என்று கூசாது கூறுகிறார்கள். 'என்ன கவுண்டரே' என விளிக்கும் இவர்கள் தாழ்த்தப்பட்ட ஓர் உடன் பிறப்பைப் போய், 'என்ன பள்ளரே' என்று விளித்தாலும் விளிக்கலாம். இப்படி விளித்தால் எப்படி யிருக்கும்? உயர்குல எண்ணமுள்ளோர் அனைத்து இடங்களிலு-மிருக்கின்றனர். இப்படிப்பட்ட ஊடுருவலால்தான் ஐயா பெரியாரவர்களின் தொண்ணூற்றாறு அகவை வரையிலான தொண்டு எதிர்பார்த்த முழுப்பயனையும் தரவில்லை.

எனவே, நாம் முதலில் தமிழர் என்னும் நினைப்புடன் நடந்து காட்டுவோம். நம் இயக்கங்களிலுள்ள மேற்சொன்னது போன்ற குறைகளை அகற்றுவோம். பிறகு அந்த மதத்துப் பக்கம் முயல் வோம். இரு குண்டுகளாயுள்ள நம் வயலில் நாம் கால் வைத்து நிற்கும் முதற் குண்டுக் களையை எடுக்க முயல்வோம்; பின் மறு குண்டைச் சீர் செய்வோம். இல்லையானல், இரண்டிலுமே களை மண்டி பயிரே நசித்துப் போகலாம். தங்களின் அன்புள்ள.

கி. இளஞ்சேரல் முதுபாண்டியன்.

பிதற்றல் ஆராய்ச்சி ஆகலாம்!

மனம் போன போக்கில் எழுதும் ஆராய்ச்சி திட்டவட்டமான பயனை இந்த அமைப்புக்குத் தரப்போவதில்லை. எழுதுகோலும் தானும் இருந்தால் போதும்- அதுவும் வெளியிடும் வாய்ப்பு உள்ளதானால், அதற்குப் பின்னணியான பணவலிமை உண்டானால் கேட்கவே வேண்டாம்! பலரின் எழுத்தில் இந்தப் போக்கை அடிக்கடி காண்கின்றேன். எனினும், எழுதும்- எதிர்க்கும்- எண்ணம் ஒரு நேரத்தில்தான் அழுத்தம் பெறுகின்றது.

அன்னம் விடுதூது (அக் 1984) இதழில் மாலன் 'இந்தி எதிர்ப்பு ஓய்ந்து போனதோ?, என்ற வினாவிற்கு விடையளித்துக் கொள்கின்றார். வினாவும் அவரே; விடையும் அவரே போலும்!

''ஆளுவதற்கு அல்ல- இணைப்பதற்கு இந்தத் தேசத்திற்கு ஒரு மொழி வேண்டும்'' என்கிறார் மாலன். இந்தியாவை இணைப்பது என்கிறார். இந்தியா துண்டுபட்டுக் கிடக்கிறது போலும். அஃது உண்மைதான். எனினும் இதனை 'மாலன்' ஒப்புக் கொள்வார் என்பது ஐயமே!

மொழியால் இணைக்க முடியும். ஒரே மொழி பேசும் மக்களை அந்த மொழியின உணர்வூட்டி ஒன்று படுத்தலாம். அதுவும் கூட அந்த நாட்டின் பொருளியல் விளைவு முறையாலேயே முடியும். ஓர் இணைப்பு மொழி என்பதுகூடப் பொருளியல் அடிப்படைத் தேவையினால் மட்டுமே இயலக் கூடியதாகும்!

இணைப்பைத் திணிப்பினால் செயல் இயலாது. இவ்வாறிருக்க 'ஆங்கிலமா, இந்தியா' என்ற சிக்கலுக்குள் மாலன் மாட்டிக் கொள்கின்றார்! கிடக்கட்டும் அவரோடு சேர்ந்து சிந்தனையைத் தொடர்வோம்!

''அது ஆங்கிலமாக இருக்கட்டும் என்று சொல்கிறவர்கள் படித்த மேதாவிகள்'' என்று கூறிவிட்டு, அடுத்த சிக்கலுக்குப் பாய்கின்றார்.

ஆங்கில இந்தியர் எனப்படுபவர் தாய்மொழி ஆங்கிலம். அவர்களை வைத்து உருவாக்கப் பெற்ற சிறுபான்மை விதிகள் உள்ளன. ஆங்கிலம் தேசிய மொழிகளில் ஒன்று. 'ஆங்கில இந்தியர்' இந்தியக் குடிமக்கள் என ஏற்கப் பட்டுள்ளனர். அலுவல் மொழியாகப் பயன்பட்டு இந்திய அரசுகளை இணைத்துக் கொண்டிருப்பது ஆங்கிலமே ஆகும்!

நாம் 'இந்த இணைப்பை'ப் பாட்டாளி மக்கள் மூலம் பெற வேண்டுமாயின் 'தாய்மொழிக் கல்விமுறை ஒன்றினை ஏற்பது தேவையாகிறது! அதை விடுத்து இணைப்பு மொழி பற்றிப் பேசுவது, சுரண்டல் பேர்வழிகளுக்கு ஆளும் கும்பலுக்கு உடனடித் தேவையாகிவிட்டதென்பதையே காட்டும்!

''இந்திய மொழிகள் பலவற்றின் வேர்ச் சொற்கள் இந்திக்கு நெருக்கமானவை.'' இதில் 'தமிழ்தவிர' என்று குறிப்பிட்டிருப்பது மாலனின் முன்னெச்சரிக்கையையே காட்டும்.

ஆனாலும் 'பெரும்பான்மை' என்பதைக் கொண்டு நம் 'தனி உரிமை'யினை மறைக்கிறார். 'வேர்ச் சொல்' கொண்டு ஆராய்ந்தால் தமிழ் உலகமொழிக்கெல்லாம் 'தாய்' என்பது புலனாகும் அதனால் 'உலகின்' இணைப்பு மொழியாகத் தமிழை ஏற்பதுதான் சரி என்று கூற முடியுமா?

மாலன் நோக்கம், தேசிய மொழியின் உரிமையை 'மறைப்பதா' என்று அறிய வேண்டும்!

"ஆங்கிலம் கற்பதை விட இந்தி கற்பது ஒரு எளிய, அதிகம் படித்திராத இந்தியனுக்கு (தமிழன் தவிர) எளிது!" என்கிறார் மாலன்.

ஆங்கிலம் மக்கள் பேசும் மொழியே, வழக்கு மொழியே, அதனைப் பயில்வது அதிகம் படித்திராதவர்க்குக் கடினம் என்று கொள்வது 'வளர்ச்சி, நுட்பம், வலிமை' பற்றி அக்கறை கொள்ளவில்லை மாலன் என்பதைப் புலப்படுத்தும். மொழியறிவு 'வெறும் தொடர்பு' என்று கருதினால், அதற்குத் தேவை பொருளாதார விளைப்பு உறவு முறை ஒன்றே போதும். இதற்குத் திட்டமிட்டு இணைப்புக்கெனக் கோடி கோடியாகக் கொட்டி அழ வேண்டாமே என்பதுதான் மார்க்சியப் பார்வையாகும்; மாலான பார்வை, மாலன் பார்வை.

மேலும், தமிழன் 'சிறுபான்மை' என்பதால், அவனை ஒடுக்கும் அரசினைக் கைதட்டி வரவேற்பார் போலும் மாலன்!

இந்தி பேசுபவன் இந்தியன்; தமிழ் பேசுகிறவன் தமிழன் என்பதே உண்மை! இதில் 'தமிழனை' மட்டும் தனிமைப் படுத்திவிட மாலன் முயல்கிறார். ஆனால், அந்தந்த மொழியாளர் —'இந்தி' என்கிற மொழிக்கு உருவாகியுள்ள தேசியம் தவிர- தங்களை 'இந்தியன்' என்று கூறிக் கொள்ள மாட்டார்கள் என்பதே உறுதியாகி விடும்!

'இங்கு இந்தி எதிர்ப்பு ஒரு அரசியல் விற்பனைப் பொருள்!

அரசியலில் விலைபோகாத பண்டம்- பொருள்- எதுவுமே இல்லை. அந்த வகையில் மாலனும் விலைபோனவரே! ஆம். ஆளும் கணச் சார்புச் சிந்தனையாளரே என்பதைக் காட்டிக் கொண்டு விட்டார்;

ஒருவேளை தி. மு. க. எதிர்ப்புக்காரராக இருத்தல் கூடும். 'போராட்டம்' முனைப்பாக இல்லை; 'வெற்றுப் பேச்சு வெடி' என்று கருதி இப்படிக் கூறுகிறாரா என்பதை விளங்கிக் கொள்ள இந்த வரி போதுமானதன்று!

அடுத்த கருத்துள்ளதே, அது பொது நிலைமை. இதனைத் தமிழ்நாட்டிற்கு மட்டும் பொருத்திப் பார்க்க முயல்கிறார் மாலன். அது வெறும் அரை வேக்காட்டுத் தனமே. பாருங்கள்.

"...யோசித்துப் பார்த்தால் ஓர் உண்மை சுடும். தமிழர்கள் அத்தனை பேருக்கும் தமிழ்நாடு மாத்திரமே ஒரு காலத்திலும்

சோறு போட்டதில்லை. அதற்குரிய நிலவளமும், தொழில்களும் பணபலமும் தமிழனிடம் ஒருபோதும் இருந்ததில்லை. காலம் காலமாக இராமநாதபுரத் தமிழன் கடல் கடந்தும், வட ஆற்காட்டுத் தமிழன பட்டாளம் போயும் பிழைத்தவன். இதற்கு ஒரு சான்று.''

மாலனின் ஆழமான கருத்து 'தமிழன் அடிமை' என்று காட்ட முயல்வதாக உள்ளது. உண்மையில் அவன் இயற்கை, அரசியல், பொருளாதாரப் போராட்டம் நடத்தி வந்த வரலாற்றால் வாழ்கிறான்- மாலன் உள்பட- என்பதைக் காண மறுக்கிறார் மாலன்!

'ஒட்டுமொத்தமாக' இவர் வைக்கும் கருத்து 'வரலாற்று வழி' வந்ததாகாது. 'தமிழன் 'அல்லல்' பட்டது போல உலக மாந்தர் யாவரும் துயர மூச்சுகளை மாற்றப் பாடுபட்டு வந்திருப்பதையே நாம் பார்க்கிறோம். மக்கள் உறவு வேறு; அடிமைத்தனம் வேறு என்று மாலன் பார்த்தல் வேண்டும். 'உறவுக்கு அடிமை வாழ்வு வாழக் கூறுவது மாலன் கருத்தாக இராது என நம்பலாம் அல்லவா?

தமிழ்நாட்டுக்கு வெளியே, இந்தியாவிற்குள்ளே போக இந்தி ஒரு எல்லைக்கடவு- பாசுபோர்ட்- என்பதை நாம் எப்படி ஏற்க முடியும். 'எல்லைக்கடவு' வேண்டும் என்பது இந்தியா ஒன்றில்லை என்பதையே உறுதி செய்யும். 'கல்வி இந்திப் படிப்பு இல்லாமலேயே, பம்பாய், கல்கத்தா, தில்லி சென்று மூன்று மாதம் தங்கினாலேயே வணிகக் கூலியின் பொருட்டுச் செல்பவன் பேசக் கற்றுக் கொள்வதை மாலன் அறியாரா என்ன?

'இந்தி வேலைவாய்ப்புக்கு இன்னும் ஒரு கதவைத் திறக்கும்' என்பது 'இந்தி பேசும் மக்களில் பல்லாயிரவர் 'வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கியிருப்பதை' மறப்பதாகும்! மொழி மட்டுமே காரணமாக்கி விடும் தவற்றினை மீண்டும் மாலன் செய்கிறார்!

''ஒரு மொழியை எதிர்ப்பது அதைக் கற்க மறுப்பது அல்ல'' என்று குப்புற விழும் மாலன் 'தமிழன்' என்று காட்டிக் கொள்கிறாரா? இந்தியரிடம் 'கெஞ்சு'கிறாரா என்பது புரியும்படி மாலன் பேசட்டும்!

இந்தி கற்றுத்தான் இந்தியரை எதிர்க்க வேண்டும் என்பது போலப் பேசுகின்றார். அதன் மூலம் தமிழ் வளரும் என்கிறார். இன்று நாம் ஆங்கில அடிமைகளாக நீடிக்கும் அவலத்தையும் அவர் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்! இந்திக்கு அடிமை என்பது பிறகு இப்படித்தான் நிகழப் போகிறது.

எண்ணிப் பார்ப்போம்—
ஆழமான தேடலுக்கு
நாம் அணியம் ஆவோம்!

--பறம்பை அறிவன்.

பைந்தமிழ் உரிமை ஆர்ப்போம்!

(பாவலர். தமிழ்க்குமரன், ஈரோடு.)

ஒருமைப் பாட்டு நரியின் ஓலம்
ஒலிக்கும் தேனுய்க் காதில்
திருட்டுப் பூனை பாலுக்குக் காவல்?
தேருது விரட்டு தமிழா!

கொத்திப் பிடுங்கும் கழுகை நீயும்
கூப்பிட்டுப் படைக்க லாமா!
நத்தி வந்தே எத்தும் பகைக்கு
நாட்டாண்மை கொடுக்க லாமா?

நரிகள், கழுகுகள், திருட்டுப் பூனைகள்
நடமாடக் கண்டோம் நாட்டில்!
திரியும் அவற்றை விரட்டா விட்டால்
தீங்கு நேரும் நமக்கு!

நன்றிக் கிங்கே நாயைச் சொல்வார்
நாயோ இனத்தைப் பகைத்துச்
சென்று பகைவன் வீட்டைக் காக்கும்
சீச்சீ எச்சில் நக்கி!

நாயின் பெருமை நமக்கு வேண்டாம்
நயனில் லாத செயல்கள்
தாயின் நாட்டைக் கண்போல் காப்போம்
தமிழ நாட்டை மீட்போம்!

நாடும், மொழியும் நமதிரு விழிகள்
நசிக்கும் பகையைத் தூர்ப்போம்!
பாடும் பயனும் நமதென் றுரைப்
பைந்தமிழ் உரிமை ஆர்ப்போம்!

முதல் வேலை! பாவலர் இளஞ்சித்திரன்.

விடுதலை பெறுவது முதல்வேலை!- என
விழித்தனர் தமிழர்; பகைஎந்த மூலை? (விடுதலை)
விடுதலைப் படையில் இணைந்தனர்; போரில்
படுதலை விரும்பி வந்தனர் உரிமைத் தேரில் (விடுதலை)
கொடுதலை எனினும் கொடுத்திட அஞ்சார்! - வரும்
கொடுஞ்சிறைக் கஞ்சிப் பணிந்துயிர் கெஞ்சார்!
கெடுதலை செய்துகீழ் அறுப்பவர் மிஞ்சார்! - அவர்
கேட்பது விடுதலை! பெருமல் துஞ்சார்! (விடுதலை)
வாழ்ந்தமண் என்னும் உண்மையைக் கண்டார்! - தன்
மானநல் மறவராய்ப் புரட்சிகைக் கொண்டார்!
தாழ்ந்தது வோஅவர் சீற்றம்? பண்டார் - தலைத்
தமிழ்நிலம் மீட்கா தவர்நலம் அண்டார்! (விடுதலை)

ஓ: *1208:* தனித்தமிழ் அரிமா பாவலர் ஏறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். ஐம்பத்தைந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தாங்கள் நெடுங்காலம் வாழ்ந்திருந்து, தமிழ்ப்பணி ஆற்ற, இறைவன் அருள்புரிவாராக. புரட்டுத் தலைவர்களின் கோமாளிக் கூத்துகளுக்கெல்லாம் முடிவுக் காலம் நெருங்கிவிட்டது. தனித்தமிழ் நாடு காணத் தமிழ் இளைஞர்கள் பொங்கி எழுவது உறுதியாகி விட்டது. தங்களின் உழைப்பின் பயனை நேரில் கண்டு மகிழப் போகிறீர்கள். அன்பன்,

—வள்ளிகேள்வன், ஈரோடு-9.

ஓ: *1209:* அன்புமிக்க பாவலரேறு ஐயா, அவர்கட்கு வணக்கம். மிகச் சிறந்த முடிவினை எடுத்த தமிழின எதிர்காலம் பற்றி நடந்த கருத்தரங்கு எனக்கு மிக நெஞ்சு நிறைவை அளித்தது. இதற்கு முன் நடந்த கருத்தரங்கை விட இவ்வாண்டு திசம்பர் திங்கள் 27,28-இல் எடுத்த முடிவே நன் முடிவாக இருந்தது. தமிழினம் அடிமையிலும் வறுமையிலும் சென்னை நடைபாதைகளில் வாழுவதைக் கண்டு நெஞ்சு துயரடைகிறது. பல அரசியல் மேலும், சீர்திருத்த வழக்கர்கள் வாழும் அம் மாநகரத்தில் இப்படியோர் இழிவான வாழ்க்கையைத் தமிழர்கள் நடத்திக் கொண்டிருப்பது கவலையைத் தருகிறது. அதற்கொரு முடிவைச் செய்யத் தவறி விடக் கூடாது. அதற்கு வழி தமிழ்நாடு தமிழர் கையில் வருவதேயாகும். அந்த நல்ல தொடக்கத்தைச் செய்தாலும், இன்னும் அதனைச் செயல்வடிவாக்கத் திட்டம் வகுக்க வேண்டுகிறேன்.

அங்கு (சென்னையில்) அப்படியோர் இழிவு நிலை இருக்கும் போது நான் சென்னையினின்று நெல்லை வழியில் பல கவர்ச்சியான காட்சிகளைக் கண்டேன். தமிழ் நாட்டு முதலமைச்சர் ம. கோ. இரா. அவர்களுக்கு இங்கு வருகை விழா எடுக்கிறார்கள். எங்குப் பார்த்தாலும் மின் விளக்குகள் பொருத்தப்பட்ட வானளாவிய கோபுர அமைப்புகள்! தனிப்பட்டவர்களும், மக்களும் சேர்ந்து செய்வதாக அச்சிடப்பட்ட சுவரொட்டிகள், அத்தனையும் விலையுயர்ந்த தாள்களில் வண்ண எழுத்துகளில் 'வள்ளல்' என்றும், 'சரித்திர நாயகன்' என்றும், டாக்டர் (பண்டாரகர்) என்றும் புகழ்ச் சொற்களால் புனையப்பட்ட தமிழ்ச் சொற்கள்! அப்பப்பா கண்கொள்ளாக் காட்சிகள். வெள்ளையர் காலத்தில் கூட ஆளுநர்கள் வருகையை நான் சிறுவனாக இருந்தபோது பார்த்திருக்கிறேன். நம்முடைய அடிமைவாழ்வில், அவர்கள் வருவதும் தெரியாது; போவதும் தெரியாது. அந்த வெள்ளையர்கள் இந்த அடிமைகளை அப்படிச் செய்யச் சொன்னதும் கிடையாது. இன்று, விருதுநகர் தொடங்கி அவ்வூர் முடியும்வரை நான் கண்ட காட்சிகளை, வேற்று நாட்டார் கண்டால், இ'து ஒரு வளமான நாடு என்றும், மக்கள் எவ்வகைக் கவலையும் இன்றி வாழ அரசு வகை செய்துள்ளதாகவும் புரிந்து கொள்ள முடியும். அஃதோடு இருமருங்கிலேயும் ஓட்டை ஓலைக் குடிலையும் அவர்கள் பார்ப்பார்கள். அதுதான் பெரிய இழிவு. என்ன நினைப்பார்களோ? நான் வந்த பேருந்து மாற்று வழியில் திருப்பி விடப்பட்டது. சரக்குந்துகளில் ஆண்களும் பெண்களும் ஏற்றப்பட்டுப் பல வகை வகையான புகழ்ச் சொற்களை ஒலி எழுப்பிக் கொண்டு வந்தனர். தமிழ் மக்கள் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி ஏமாறப் போகிறார்களோ? அந்தோ பெரும் அவலம்! வரிசையாகக் காவலர்கள் நகரைவிட்டு வெகு தொலைவுவரை முகம் வாடி நின்றனர்.

ஒலிபெருக்கிகளின் தொல்லை மிகுதியால் எப்போது இவ்விடத்தை விட்டுக் கடப்போம் என்றாகிவிட்டது. இங்கு இரவில்

வீடுகளுக்கு இரவு 9 மணி வரைக்கும் மின்சாரம் சரியாக வருவது இல்லை. தட்டுப்பாடு. வரி கொடுத்தவர்கள் இருளில்; வரியை வாங்குகிறவர்கள் மகிழ்ச்சி தரும் ஒளியில் உலா. என்ன? தமிழ் நாடே உன் நிலையை என்றைக்கு 'நீ நினைத்துப் பார்க்கப் போகிறாய்' என்று நானே எனக்குள் கேட்டுக் கொண்டேன். இப்படி வீணாகச் செலவு செய்ய வைத்து விட்டு அமைச்சர்கள் மகிழ்கிறார்கள். மக்களை நசுக்கும் செல்வர்களின் ஆட்சி இது. இவ்வாறு மக்களை வன்கொலை செய்வதைவிட குண்டுகளைப் போட்டுக் கொன்று விடலாம்; சாகாமல் சாவதைவிட ஒரே மூச்சாக செத்து மடிவதுதான் மேல் என்று நான் எண்ணிக் கொண்டே வந்தேன். தங்கள் அன்புள்ள, அதியமான், தாழையூற்று,

O: 1210 அன்பு கனிந்த "செந்தமிழ்த்திரு" பாவலரேறு ஐயா அவர்கட்கு வணக்கம். ஐயா; நீங்கள் தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மொழிக்காகவும் மிக அரும்பாடு படுகிறீர்கள் என்று கேள்வியுற்றேன். இக் காலத்தில் பல நாற்றம் அடிக்கும் இதழ்களைப் பலர் விற்பனை செய்கிறார்கள். மிக நேர்மையான, பண்பான அறிவியலை வளர்க்கக் கூடிய நல்ல இதழ்களை அரும்பாடு பட்டுப் பல இன்னல்களுக்கு இடையில் மிகச் செப்பமான முறையில் நடத்துகின்றீர்கள் என்பதைத் தெரிந்து கொண்ட இந்த இளைஞன் உங்களிடத்தில் அறிமுகமாகிறான்.

இக் காலம் தமிழைப் பேசுவதற்கே வெட்கப்படுகின்ற காலம்; ஆனால் பலர் என்னைப் பகடி செய்தாலும் நான் தமிழனாகத் தமிழைப் பேசுவதற்கு மிக வேட்கையாக உள்ளேன். அது தவிர உங்களிடத்தில் அறிமுகமாவதை நல்வாய்ப்பாகக் கருதுகின்றேன். —மு. பச்சையப்பன், புதுவை-9

O: 1211: அன்புள்ள அய்யா அவர்களுக்குத் தங்கள் அன்புத் தொண்டன் அன்பு வரையும் மடல்... தங்களையும், அம்மாவையும் கண்டு, பார்த்துப் பேசி வந்ததில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம். எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகும்... தாங்கள் கட்டாயம் பம்பாய் வந்து போகவும்... ஐயா, நம் தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்களைப் பம்பாயில் உள்ள நம் தமிழர்கள் பலரும் அறியாதிருக்கிறார்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் விளம்பரப்படுத்தவும், உறுப்பினர்களைச் சேர்த்துவிடவும் இருக்கிறேன். தமிழர்களுக்கு என்றும் தேவையான தனித்தமிழ் நாடு அடைவதற்கு என்றும் தங்களுக்குத் தூணாக நின்று செயல்படுவேன் என்று உறுதியாகக் கூறிக் கொள்கிறேன். செயல்படத் தொடங்கிவிட்டேன். தாங்கள் பம்பாய் வந்து செல்வதால், இங்குள்ள தமிழர்களுக்குச் சிறிதளவேனும் பயன் விளைய வேண்டும் என்பதே என் கவலை. தங்கள் வரவு பலருக்கும் பய்ன்பட வேண்டும் என்பதே என் ஆவல்!

அன்புத் தொண்டன், —இரா. அன்பு. பம்பாய்-17

O: 1212: அய்யா அவர்களுக்கு!... கடந்த ஓராண்டுக் காலமாகத் தென்மொழி இதழ் பெற்று பயின்று வருகிறேன். இம் மாதத் திங்கள் இதழில் சுவடி-53. ஓலை-3-இல் பக்கம் 21 இல் 'விளம்பரங்கள் பொய்முகங்கள்' என்ற தலைப்பில் 9 பக்கத்திற்கு எழுதியுள்ள தற்கால விற்பனை விளம்பரங்களைப் புதிய கலாச்சாரம் என்ற இதழிலிருந்து எடுத்துப் பதிப்பித்து உள்ளீர்கள். பக்கங்கள் வீணாகி விட்டது எனக்குச் சற்று வருத்தம் அளித்தது. எவ்வளவோ தமிழர் நலச் சிக்கல்கள் இருக்கும் பொழுது இது நமக்கு எதற்கு என்பதேயாகும்! -அன்பன் நா. செல்வராசு குரும்பப்பட்டி

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005.